அறைவு 04 இயம் 24 January 16 to 22, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

உலகில்
இன அழிப்பிற்கு
உள்ளாகிய இனங்கள்
1. நிலைமாறுகால நீதி
2. நல்லிணக்கம்
3. நிரந்தர சமாதானம்
ஆகிய
பழமுறைகளிலேயே
சமாதானத்தை
எட்டியுள்ளன.

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# தமிழ் மக்களின் நிலை மாறவில்லை





**த**மிழ்த் தேசம் தனது அவலங்களிலிருந்தும் ஆற்றாமைகளிலிருந்தும் இன்னும் மீளவில்லை என தேசிய பொங்கல் விழாவில் வடமாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கொண்டாடப்பட்ட தேசிய பொங்கல் வழாவில் ஶ்ரீலங்கா அரசின் பிரதமர் ரணில்விக்ரமசிங்க, பிரித்தானிய இராசாங்க அமைச்சர் ஹுயூகோ ஸ்வையர், முன்னாள் சனாதிபதி சந்திரிகா அம்மையார், ஶ்ரீலங்கா அரசின் அமைச்சர்களான சுவாமிநாதன், விஜயகலா மற்றும் வடமாகாண சபையின் ஆளுனர் உட்பட்ப் பலர் கலந்திருந்த விழாவில் தமிழர்களின் உண்மை நிலையை உலகிற்கு எடுத்தியம்பினார் வடக்கின் முதல்வர்.

அரசியல் கைதிகள் 17

சி.வி விக்னேஸ்வரன்

## "அரசியல் அமைப்பிலேயே தமிழர்களின் எதிர்காலம்"



எதிர்க்கட்சித் தலைவர்
கௌரவ இரா. சம்பந்தன்

**நா**ட்டில் ஒரு புதுப்பாதையை உருவாக்குவதற்காய் புதிய அரசியல் சாசனத்திற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அது ஒவ்வொருவரின் கடமை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையில் தெரிவித்தார்.

நாடு சுபீட்சமடைய 17

## சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகளுக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை

**இ**லங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள் எவருக்குமே கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டிய தேவையில்லை என ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சட்ட 17

## மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக மீண்டும் குற்றச்சாட்டு



**கி**ழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.ரி.எம் நிசாமிற்கு எதிராக மீண்டுமொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ம் திகதி திடீரென அவரால் மூதூர் வலயப் பாடசாலை அதிபர்களுக்காக கூட்டப்பட்ட கூட்டம் தொடர்பாகவே இக்குற்றச்சாட்டு எழுந்துள்ளதுடன் இக்குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தனது கண்டனத்தை கல்விப் பணிப்பாளருக்கு எதிராக வெளியிட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

17

## புதிய அரசியல் அமைப்பிலும் மாகாண சபைக்கே முக்கியத்துவம்



வாசுதேவ

**பு**திய அரசியல் அமைப்பிலும் மாகாண சபைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிந்த காலத்திலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டுள்ளதாகவும் ஐக்கிய இலங்கைக்குள் இலங்கையர்களாக வாழத் தயாரென்றும் கூறிவருகிறார்.

ஆனால் இலங்கையின் அரசியலமைப்பில் ஒற்றையாட்சியே வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே கூட்டமைப்பு ஐக்கிய இலங்கை என்பதை விடுத்து ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை, புதிய அரசியலமைப்பிலும் மாகாண சபை 17

## ஊழல்கள், இலஞ்சம், சட்டவிரோத நடவடிக்கைகளை மக்கள் குறைகேள் பணிமனைக்குத் தெரிவியுங்கள்

**கி**ழக்கு மாகாணத்தில் நடைபெறும் சமூகச் சீர் கேட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மலைமுரசினால் நிர்வகிக்கப்படும் "மக்கள் குறைகேள்" பணியகத்திற்குத் தெரிவிக்குமாறு பொது மக்களிடம் மலைமுரசு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான காத்திரமான நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந் நேரத்தில் அவற்றைத் தடுப்பதற்கான அரசியல் பின்புமானது மிக வறிய நிலையிலுள்ளதால் கிழக்கு மாகாணத் தமிழரின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. 17

aat SRI LANKA

வகுப்புக்கள் ஆரம்பம்
23.01.2016

வேல் வர்த்தகக் கல்லூரி
159A, கடல்முக வீதி, திருகோணமலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# விக்கிரமாதித்தனின் வாள்....!

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதே தமது இறுதி முடிவு என்பதை சிங்களப் பேரினவாதத்தின் ஊதுகுழல்கள் பறையடிக்கத் தொடங்கிவிட்டன.

ஒற்றையாட்சிக்குள் எய்தப்படும் எந்தவொரு தீர்வும் தமிழர்களின் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வாக இருக்கப் போவதில்லை என என்று எமது போராட்டம் எமது ஈழ மண்ணில் ஆரம்பமாகியதோ அன்றிலிருந்தே பல மூத்த அறிஞர்களாலும், சர்வதேச இராசதந்திரிகளாலும் சொல்லப்பட்டே வருகின்றது.

முதலில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனை எது என்பதைப் புரிந்து கொண்டால் மட்டுமே எமது பிரச்சனைக்கான நிரத்தரத் தீர்வைத் தேட முடியும்.

தமிழ் மக்களின் பிரச்சனை அவர்களுக்கான அதிகாரங்கள் கிடைக்கவில்லை என்பதல்ல. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது இருப்பதே தமிழ மக்களின் அடிப்படைப் பிரச்சனையாக உள்ளது.

தமிழ மக்களின் தேசிய இனத்துவ இருப்பு என்பது அவர்களின் பூர்வீக நிலம், மொழி, கலாசாரம், ஒரு படித்தான வாழ்க்கைமுறை போன்ற விடயங்களில் தங்கியிருக்கின்றன. அவற்றை இழந்து விட்டால் தேசிய இனமான தமிழினம் சிறுபான்மை இனமாக கணக்கெடுக்கப்பட்டு பெரும்பான்மைத் தேசிய இனத்துடன் சேர்ந்து வாழ நிரப்பந்திக்கப் பட்டுவிடும்.

தற்போதும் சேர்ந்து வாழத் தலைப்பட்டுள்ள தமிழர்கள் தாமும் ஒரு தேசிய இனமாகச் சுயநிர்ணய உரிமையுடன் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ விரும்புகின்றனரே ஒழிய சிறுபான்மையினமாகச் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்பதைத் தெரிவிக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர்.

அக்கடப்பாட்டை தெரிவிக்கும் சொற்களே தாயகம், தேசியம் சுயநிர்ணயம் என்ற முச்சொற்களுக்குள் அடங்கியிருக்கின்றன.

அவற்றை உச்சரிக்க முயன்ற தமிழ்த் தேசியவாதத்தினைச் சிங்கள தேசியவாதம் தடுக்க முனைந்ததாலேயே யுத்தம் இன்றும் நீண்டு செல்கின்றது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளதமது தாயகமான வடக்கு கிழக்கு இணைந்த பிதேசத்தில் சுயநிர்யண உரிமையுடன் கூடிய தேசமொன்றைக் கேட்டு நிற்பதும், அதனையொத்த தீர்வொன்றே தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைக் காக்கும் என்பதும் தெளிவானது.

இந்த நிலையில் மிகப் பெரும் ஆயுதப் போராட்டத்தின் தற்காலிக அமைதியானது தமிழர்களுக்குத் தேவையான தீர்வை அரசியல் ரீதியாக வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை கடந்த ஆறு ஆண்டுகளாகப் பேரினவாத அரசின் மீது சுமத்தியுள்ளது.

அந்த நிர்ப்பந்தமானது உண்மையிலேயே தமிழர்கள் விரும்புகின்ற தீர்வொன்றை உருவாக்கும் முதற்படியாக உள்ளதைப் புரிந்து கொண்டுள்ள ஸ்ரீலங்கா அரசின் விக்கிரமாதித்தர்கள், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய வடக்குகிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்திலேயே தமிழர்களின் தீர்வு என்ற வேதாளத்தை வெட்டிச் செல்ல தற்போது பயன்படுத்தத் தொடங்கியிருக்கும் வாள் எது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான தரணத்தை நாம் வந்தடைந்திருக்கின்றோம்.


வேதாளம் தொங்கியிருக்கும் முருங்கை மரமானது தமிழ் மக்களின் உயிர் நிலையாக இருக்க அவ்வுயிர் நிலையை அடக்கி வைத்திருக்க மென்வலு மற்றும் சாணக்கியம் என்ற சொற்களைக் கொண்டு அந்த வாளின் முனைகள் தீட்டப்பட்டு முருங்கை மரத்தின் மீதே கூர்பார்க்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டம் என அந்த வாள் வெளிப்படையாக அறிவித்த நாளில் இருந்து இறுதியாக நாடாளுமன்றத்தில் “மஹிந்த ராசபக்ச ஒரு தேசியத் தலைவராக நோக்கப்படுகின்றார், இனித் தமிழர்கள் எப்போதுமே தனிநாட்டைக் கோர மாட்டார்கள்” என அவ்வாள் முழங்கியபோதும் தமிழ் மக்களின் தீர்வுக்காகப் பேசப்படவேண்டிய சமஷ்டி அல்லது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி, வடக்குகிழக்கின் இணைப்புப் பற்றியவற்றைப் பேசாமலே ஸ்ரீலங்கா விக்கிரமாதத்திர்களின் கரகோசத்துடன் அந்த வாள் தனது உரையை முடித்துக் கொண்டது.

ஆக மொத்தத்தில் பஞ்சாயத்து ராஜ் என்ற இந்திய மாதிரிக்கு அமையவொரு தீர்வு “அ(?)ணில்ராஜ்” என்று அறிவிக்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்ட வாளுக்கு அஞ்சி முருங்கைமரம் அமைதி காக்கலாம்.

எனினும் வேதாளத்தின் நிலை அதுவல்லவே...! இன்று விக்கிரமாதித்தர்கள் முருங்கை மரப் பிடியுடன் கூடிய வாளைக் கொண்டு வேதாளத்தினை வெட்டித் தூக்கிச் செல்லலாம்....! எனினும் இடைநடுவில் வேதாளத்தின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாதபோது வேதாளம் மீண்டுவரும்...! வாள் மழுங்கிப் போகும்....!

# வளர்ச்சிப் படிகளில் சாஹிரா



இடமிருந்து வலமாக கலைத்துறைக்கு தெரிவான அருஸா 2 ஏ,1பி , வைத்தியத் துறைக்கு தெரிவான இம்தியாஸ் பாத்திமா தூபா, 2 ஏ ,1பி, ஜெம்சித் சிபா 2 ஏ ,1பி, மத்தியில் அதிபர் எஸ்.முகமட் அலி அடுத்து பொறியியல் துறையில் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்ற சமீம் முகமட் ஷாம் 3ஏ , அடுத்து வர்த்தகத் துறைக்குத் தெரிவான சவார்தீன் முகமட் தஸ்னீம் 2 ஏ ,1பி , ஜூ/னைத் முகமட் சியான் 2 ஏ ,1பி ,அப்துல் நசார் முகமட் அர்சாத் 2 ஏ ,1பி பொறியியல் துறைக்குத் தெரிவான ரைஸ் முகமட் ரசாத் 3 பி

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் திருகோணமலை சாஹிரா கல்லூரி முன்நிலைகளை படைத்துள்ளது.

பொறியியல் துறையில் மாவட்டத்தின் முதலிடத்தை பெற்றுக் கொண்டதுட்பட எட்டு மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும் வல்லமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

றபாய்தீன்

## அல் ஹிஜ்ராவில் இம்ரான் மஹ்ரூப் நா.உ

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பதினைந்து ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் முதல் உதவி தொடர்பான பயிற்சி பட்டறை 08.01.2016 - 10.01.2016 வரை நடைபெற்றது.

இப் பயிற்சியினை இன்ரநியூஸ் மற்றும் றைட்ஸ்நவ் ஆகிய அமைப்புக்கள் இணைந்து

## அல் ஹிஜ்ராவில் இம்ரான் மஹ்ரூப் நா.உ

மூள்ளிப்பொத்தானை அல் ஹிஜ்ரா கனிட்ட வித்தியாலய முதலாம் தர மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு அதிபர் அ.அப்துல் ரௌப் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ருப் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பாடசாலையின் குறைகள் தொடர்பான மனுவொன்றும் நாடாளுமனற் ஒறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

ஹலீம்




## சர்வதேச உதவியை இன்னர்வீல் கழகம் வழங்கியது

திருகோணமலை மூதூர் சூடைகுடா பாரதி வித்தியாலயத்தை சேர்ந்த 25 பள்ளி மாணவர்களுக்கு, திருகோணமலை இன்னர்வீல் கழகத்தினர் விளையாட்டு பொம்மைகள் மற்றும் காலணிகள் அன்பளிப்புச் செய்தனர்.

இங்கிலாந்தை சேர்ந்த திருமதி மங்களேஸ்வரி ஜெயகுமார், மற்றும் திருமதி விபு சக்திபவன் ஆகியோர்ரின் நிதிப்பங்களிப்பில் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.




## மன்னார் மாவட்ட ஆயர் அதி. வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை



மன்னார் மறைமாவட்ட ஆயராக (அப்போஸ்தலிக்க பரிபாலகராக) முன்னாள் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15ம் திகதி மாலை 4.30 மணி தொடக்கம் பிரயோகத்திற்கு வரும் இந் நியமனத்தை வத்திக்கானின் திருச்சபை வழங்கியுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயரும் தமிழ மக்களின் இன்னல்களை அச்சமின்றி உலகறியச் செய்தவருமான அதி. வணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் அவரகள் தமது உடல் நலையைக் கருத்திற்கொண்டு விடுத்திருந்த இளைப்பாற்றல் கோரிக்கையை ஊற்றுக்கொண்ட வத்திக்கான் திருச்சபை தறகாலிகமாக அவ் வெற்றிடப் பணிக்கு வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களை நியமித்துள்ளது.

# ஊடகவியலாளருக்குப் பயிற்சி

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பதினைந்து ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் முதல் உதவி தொடர்பான பயிற்சி பட்டறை 08.01.2016 - 10.01.2016 வரை நடைபெற்றது.

இப் பயிற்சியினை இன்ரநியூஸ் மற்றும் றைட்ஸ்நவ் ஆகிய அமைப்புக்கள் இணைந்து மட்டக்களப்பு ஈஸ்ட்லகுன் விடுதியில் நடாத்தின.

தமிழ் மிரர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மதன் மற்றும் யாழ் ஊடக மையத்தின் பிரதிநிதி தயாபரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தினர்.

அச்சுதன்



## முறாசிலுக்கு முதலிடம்

அச்சுதன்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அதன் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில இலங்கையில் ஊடகவியலாளர்கள் மத்தியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் மூதூர் முறாசில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ஆக்க இலக்கியப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் 25ற்கும் அதிகமான வெற்றிச் சான்றிதழ்களையும் பல விருதுகளையும் வென்றுள்ள முறாசில் ‘‘முஸ்லிம்களும் சமகாலப் பிரச்சினைகளும்-சில பதிவுகள்’’, “[illegible]” ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

## முன்னாள் மனைவிக்குத் தடுப்பு

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றும் முன்னாள் கணவன் மற்றும் மனைவிக்கிடையிலான தகராறில் கணவனைக் கடுமையாகத் தாக்கிய மனைவியைத் தடுப்பில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பன்குளம் பிரதேசத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சட்டரீதியாகப் பிரிந்துள்ள இருவரும் பிரச்சனையொன்றைத் தீர்ப்பதற்காகக் காவல்துறை அலுவலகத்திற்கு வந்திருந்த போதே ஆத்திரமடைந்த மனைவி கணவனைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமறியல் நீடிப்பு



மட்டக்களப்பு

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் கணேசராஜா உத்தரவிட்டார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக பிள்ளையான் கடந்த 9 ஆம் திகதி கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். இந்த நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

இதேவேளை எதிர்வரும் 26ஆம் திகதி கிழக்கு மாகாணசபை அமர்வில் கலந்து கொள்வதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்பு செய்திகள்

## உண்மையை மறைத்தேன் என்கிறார் - சாட்சி

மட்டக்களப்பு

கருணா அம்மான் தரப்பினருடன் தொடர்புகள் வைத்திருந்ததால் ரவிராஜ் கொலை தொடர்பான தகவல்களை மறைத்ததாக, அந்த காலகட்டத்தில் இருந்த அரசின் புலனாய்வுப் பிரிவின் கொன்ஸ்டபிள் பீரித்தி விராஜ் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பான விசாரணையின் போது அரச சாட்சியாளரான முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் கொன்ஸ்டபிள், குறுக்கு விசாரணையின் போது பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



## தொடர் வல்லுறவை ஏற்படுத்திய பெரியப்பாவிற்கு விளக்கமறியல்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு - ஆரையம்பதி அமரசிங்கம் வீதியைச்சேர்ந்த 38 வயதான ஞானமுத்து சிறிதரன் என்ற நபர் நாலரை வயது சிறுமியை பாலியல் வல்லுறவிற்குட் படுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் சிறுமியின் பெரியப்பா என தெரியவருகின்றது.

சந்தேக நபரின் மனைவியின் சகோதரி வைத்தியசாலையில் பணிபுரிவதால் தனது பிள்ளையான குறித்த சிறுமியை இவர்களின் பராமரிப்பில் விட்டுச்சென்ற சந்தர்ப்பத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரான இவர் தொடர்ச்சியாக சிறுமியை வல்லுறவிற்கு உட்படுத்துவதாக காவல்துறையினரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமி சிறுநீர் கழிக்க முடியவில்லை என தெரிவித்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே இந்த விடயம் வெளியாகியுள்ளது.

## கஞ்சாவுடன் கைது

அம்பாறை



அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 55 வயதுடைய ஒருவரை இன்று புதன்கிழமை காலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பில் தமக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 250 கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு கண்டனம்

கல்குடா

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எம்.ரி.நிசாம் மீது, இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் பத்திரிகை மூலம் தெரிவித்த குற்றச்சாட்டானது கண்டனத்துக்குரியது என கல்குடா கல்வி வலய அதிபர்கள் சங்கத்தின் தலைவரும் சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் அதிபருமான எம்.தவராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கடந்த புதன்கிழமை ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, கிழக்குமாகாணத்தில் எத்தனை ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளார்கள். அவர்கள் எந்த வகையினர் என்பதை பல ஆண்டுகளாக ஆசிரியர் சங்கம் அறிந்ததில்லை.

சரியான தகவல்களை பலத்த சிரமத்தின் மத்தியில் தந்தபெருமை தற்போதைய கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரையே சாரும்.

2015 வரை கூடுதலான ஆசிரியர் வளம். பௌதீகவளம் என்பவற்றை வழங்கி-யதோடு கஷ்டப் பிரதேசங்களுக்கு கூடியளவு விஜயம் செய்து தமிழ் மாணவர்களின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்த பெருமையும் இவரையே சாரும்.

இந்த அமைப்பு ஆசிரியர் நலன்சார்ந்த அல்லது மாணவர் நலன் தொடர்பாக இது வரை எதைச் செய்தார்கள் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். எனவே, தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் நின்று மாகாண கல்விப் பணிப்பாளரின் சேவையை மதிப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தார்.

## மணல் அகழ்வு தொடர்பில் தீர்க்கமான முடிவு

மட்டக்களப்பு

இடம்பெற்றுவரும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் மணல் அகழ்வதற்கான பல அனுமதிப்பத்திரங்களை வைத்துக்கொண்டு மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக சாதாரண மக்கள் தொழிலின்றி பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணமும் இங்கு வேண்டுகோள் விடுத்தார். இது தொடர்பில் ஆராய்ந்த மாவட்ட அபிவிருத்திக்குழு தீர்க்கமான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தது.

## டெங்கு சோதனை துரிதப்படுத்தப்பட்டுள்ளது

துறைநீலாவணை



பரவலாக டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. டெங்கு காய்ச்சலினால் இறப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றது.

இதை தடுக்கும் முகமாக துறைநீலாவணைக் கிராமத்திலுள்ள பொதுவிடங்கள் உட்பட சுமார் 750 வீடுகளில் கடந்த புதன்கிழமை சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், டெங்கு நுளம்புகளினால் ஏற்படக்கூடிய பாரிய தாக்கம் தொடர்பான விளக்கங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்ததாக அக்கிராமத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.வேணிதரன் தெரிவித்தார்.

தேசிய டெங்கொழிப்பு வாரத்தையொட்டி களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதாரப் பணிமனையும் காவல்துறையினரும் இணைந்து இந்தச் சோதனையை மேற்கொண்டனர்.

## வறிய மாணவர்களுக்கு உதவுவேன்



மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குப்பட்ட பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயின்று, தனது குடும்ப வறுமையையும் தாண்டி கஸ்டத்தின் மத்தியில் வைத்தியத்துறைக்கு பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவியே நாகேந்திரம் ரஜிதா.

மாணவி ரஜிதாவின் வீட்டு சூழலானது மிகவும் எளிமையானது. அத்துடன், குறைந்த வருமானத்தைக் கொண்டு அன்றாடம் வாழ்க்கையை நடாத்தி வழும் ஓர் ஏழைக் குடும்பம்.

என்னைப்போல் வறுமையில் முன்னேற வேண்டும் என ஆர்வமான மாணவர்களுக்கும் வறிய மாணவர்களுக்கும் நான் வைத்தியராக வந்த பின்னர் பல சேவைகளை எமது பிரதேசங்களுக்கு செய்வதற்கும் நான் அர்ப்பணிப்புடன் காத்து இருக்கின்றேன் என கூறியுள்ளார் அவர்.

## தொழில்சார் உரிமைகள் தொடர்பில் மகஜர்

கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண சபையின் கீழ் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களின் தொழில்சார் உரிமைகள் மறுக்கப்படுகின்றமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அனைத்து முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிற் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த வியாழக்கிழமை மகஜர் அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் தெரிவித்தார்.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்திருப்பினும், இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததனால் பல நினைவூட்டற் கடிதங்களை அனுப்பி இருந்தும் அதற்கும் எதுவித முன்னேற்றமும் கிடைக்கப்பெறாதமையால் முறைப்பாடு தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொண்டு நியாயம் பெற்றுத்தருவதற்கும் கிழக்கு மாகாணத்தின் அனைத்து அரச அலுவலகங்களிலும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆவணசெய்து தரும்படியும் கேட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## கடல் பாதுகாப்பிற்காக இலங்கையும் ஜப்பானும்

கொழும்பு

கடல் பாதுகாப்பில் ஒத்துழைப்பு வழங்குவது குறித்து இலங்கையும் ஜப்பானும் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளன. அத்துடன் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்தியிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மற்றும் ஜப்பானுக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாக அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜீ எஸ் பீ பிளஸ் வரிச்சலுகை

கொழும்பு

**மீண்டும் அமுலாகும் வாய்ப்பு – வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு**

இலங்கை ஜீ எஸ் பீ பிளஸ் வரிச்சலுகையினை மீண்டும் பெற்றுக்கொள்ள அண்மித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பிரித்தானிய நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹியுகோ ஸ்வேயார் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமான வரத்தக மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான 3 நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய வெளியுறவு அமைச்சரான இவர் இலங்கையின் நல்லிணக்கத்தினையும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரித்தானிய மற்றும் இலங்கைக்கிடையில் பல வருடங்களாக அரச ஒத்துழைப்புக்கள் மற்றும் நல்லிணக்கம் ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் பிரித்தானியாவில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு தாம் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவருள் துறவியும் சந்தேகத்தில்

மாத்தறை

மாத்தறை தலல்லு கடற்கரையில் வெளிநாட்டு பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நான்கு பேரை கந்தர காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஜேர்மனிய பெண்ணொருவரே இவர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் ஒரு துறவியும் அடங்குவதாக கந்தர காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மாத்தறை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ராஜிதவிற்கு எதிராக வழக்கு

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அரச மருத்துவமனைகளில் மருத்துவ பயிற்சி பெற்றுகொடுத்தல் தொடர்பான செயற்பாடுகளுடன் தொடர்புடைய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அமைச்சின் செயலாளருக்கு எதிராக எதிர்வரும் வாரத்தில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுளளது.

இதனை அரச மருத்துவ அதிகாரிகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நேற்று மதியம் கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அந்த சம்மேளனத்தின் ஊடக பேச்சாளர் முனைவர் நவீன் த சில்வா இதனை தெரிவித்திருந்தார்.

## எம்பிலிபிட்டிய இளைஞர் கொலை தொடர்பில் தொடரும் மர்மம்

எம்பிலிபிட்டிய

எம்பிலிப்பிட்டிய இளைஞரின் சந்தேகத்திற்கிடமான மரணம் தொடர்பான விசாரணைகளில் இருந்து காவல்துறை ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர விலகிக்கொண்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய மரணம் தொடர்பான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக காவல் திணைக்களத்தின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர நியமிக்கப்பட்டிருந்தார். சட்டத்தரணியான இவர் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜரானதுடன், கடந்த புதன்கிழமை நடைபெற்ற விசாரணைகளின் போது சாட்சிகளை குறுக்கு விசாரணையும் செய்திருந்தார்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு வக்கீல் விஜித புஞ்சிஹேவா தனது கடுமையான ஆட்சேபணையை வெளியிட்டிருந்தார். எனினும் அதனை பொருட்படுத்தாது புதன்கிழமை விசாரணைகளின் போது ருவான் குணசேகர காவல் திணைக்களத்தின் சட்டத்தரணியாக செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று காவல் மா அதிபருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் எம்பிலிப்பிட்டிய இளைஞரின் மரணம் தொடர்பான வழக்கிலிருந்து தான் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார். இதன் காரணமாக எதிர்வரும் வழக்குத் தவணைகளின் போது வேறு ஒரு வழக்கறிஞர் காவல் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகவுள்ளார்.

எனினும் அவர் விலகியமை குறித்த எந்த ஒரு விளக்கமும் வெளிவிடப்படவில்லை.

## திஸ்ஸவின் புதிய கட்சி ஆரம்பம்



முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

எக்சத் புரவெசி பெரமுன என்ற பெயரில் இந்தக் கட்சி இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க, ஜனநாயகத்தை கௌரவித்து ஜனநாயக ஆட்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதே தமது கட்சியின் நோக்கம் என தெரிவித்தார்.

## தற்கொலை முயற்சி

கண்டி - போகம்பர குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்ய முயற்சித்த பெண்ணொருவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 25 வயதுடைய குறித்த பெண் கண்டி ரெஜின உணவகத்திற்கு அருகில் உள்ள குளத்தில் குதித்த நிலையில் காவற்துறையினர் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் குறித்த பெண் காப்பாற்றப்பட்டு கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகிறார். காதலனுடன் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக தெரிகிறது.

## 70% த்தால் எண்ணெய் விலை குறைவு

கொழும்பு

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை 70% பாரியளவில் வீழ்ச்சியடைந்தும் அதனை இந்த நாட்டு மக்களுக்கு அனுபவிக்க முடியவில்லை என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்றைய தினம் 30 அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன், அது கடந்த 11 ஆண்டுகளுக்கு பின்னர் காணப்பட்ட குறைந்த விலை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் விலை சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான யோசனை ஒன்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. குறித்த யோசனைக்கு நிதியமைச்சின் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஒரு வார காலம் தேவைப்படும் என்று கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## களஞ்சிய சாலையான விமான நிலையமே இலாபம்

மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தை விட கூடுதலான வருமானம் நெல்லைக் களஞ்சியப்படுத்தியதால் கிடைத்துள்ளதாக கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை, குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த 4000 மெட்ரிக் தொன் நெல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. விலைமனு கோரப்பட்டதைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களுக்கு நெல் வழங்கப்பட்டுள்ளது. இந்த களஞ்சியசாலையை பொறுப்பேற்கும் முன்னர் புறாக்களின் வதிவிடமாகவே காணப்பட்டது. இக்களஞ்சியசாலைக்காக 8 இலட்சம் வாடகையாக வழங்கப்பட்டது.

விமான நிலையத்தின் மாத வருமானம் 16 ஆயிரம் ரூபா. எனினும், நெல் சந்தைப்படுத்தல் சபை மாதாந்தம் 8 இலட்சம் ரூபாவை செலுத்தி வருமானத்தை பெற்றுத்தந்தமை குறிப்பிடத்தக்கது.




## மீண்டும் குறைக்கப்பட்ட பாண் விலை

ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்ட ஒரு இறாத்தல் பாணின் விலையை மீண்டும் குறைப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது. தேச நிர்மாண வரி 2 வீதத்திலிருந்து 4 வீதம் வரை அதிகரிக்கப்பட்டமையினால் அனைத்து பேக்கரி உற்பத்திகளின் செலவும் அதிகரித்திருந்ததாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கேஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பாண் இறாத்தலொன்றின் விலை ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. பின் அரசாங்கத்தினால் மீண்டும் தேச நிர்மாண வரி குறைக்கப்பட்டமையினால் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விலைக் குறைப்பு நேற்று நள்ளிரவு தொடக்கம் அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

அமெரிக்கா

## இறுதி உரையாற்றிய அமெரிக்க அதிபர் - ஒபாமா

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்று 8 வருடங்கள் நிறைவடைகிறது. இரு அவைகளும் கூடிய கூட்டு பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாக, ஒபாமா இறுதி உரையை ஆற்றினார்.

துப்பாக்கி வன்முறைகளிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பது அவசியம் என ஜனாதிபதி பரக் ஒபாமா தெரிவித்துள்ளார். நாட்டு மக்களுக்காக பரக் ஒபாமா ஆற்றும் அரச இறுதி உரையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொழிலுக்கேற்ற ஊதியம் வழங்குவதிலும், பணியாளர்களுக்கான உரிய விடுமுறைகளை வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். உலக நாடுகளிடையே வல்லமையுடைய நாடாக அமெரிக்கா விளங்குவதாகவும் ஒபாமா தனது 8 ஆவதும் இறுதியுமான உரையில் கூறியுள்ளார்.

அனைத்து பிரஜைகளுக்கும் கல்வி அவசியமானது என்பதை இதன் போது அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். ஐ.எஸ் ஆயுததாரிகளுடனான மோதலானது ஒருபோதும் 3வது உலகப்போராக உருவெடுக்காது எனவும் தனது இறுதி உரையில் தெரிவித்துள்ளார்.



சவூதி

## சவுதியை தாக்கப் போவதாக அச்சுறுத்தல் - அல்கொய்தா



இவ்வாண்டு ஜனவரி 2ஆம் திகதி, சவூதியில் வைத்து 47 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமையைத் தொடர்ந்து, அந்நாடு மீது தாக்குதல் மேற்கொள்ளுமாறு, அல் கொய்தா குழு கோரியுள்ளது.

அல் கொய்தா குழுவின் தலைவர் அய்மான் அல்-ஸவஹ்ரியால் வெளியிடப்பட்டுள்ள ஒலிப்பதிவிலேயே, இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட 47 பேரில், பிரபல ஷியா தலைவரான நிம்மர் அல்-நிம்மர் உட்பட நான்கு பேர் ஷியா முஸ்லிம்களாக அமைய, ஏனைய 43 பேரும், அல் கொய்தா அமைப்பைச் சேர்ந்தவர்களென அறிவிக்கப்படுகிறது.

இந்த 43 பேருக்கான மரண தண்டனையே, அல் கொய்தாவை ஆத்திரப்படுத்தியுள்ளது. இந்தக் கொலைகளுக்கான பலனை, சவூதி அரேபியா அனுபவிக்க நேருமென அவர் எச்சரித்துள்ளார்.

அத்தோடு, சவூதி மன்னரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு, சவூதி மக்களைக் கோரியுள்ளார்.

வடகொரியா

## முதன் முறையாக விண்வெளியில் நடந்தவர் டிம் பீக்

பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த விண்வெளி வீரரான டிம் பீக் என்ற ஆராய்ச்சியாளர் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெளியேறி முதன் முதலாக விண்வெளியில் நடந்த நேரடிக்காட்சிகள் வெளியாகியுள்ளன.

ஆய்வு மையத்திற்கு வெளியே உள்ள ஆய்வு சாதனம் பழுதானதை தொடர்ந்து அதனை சீர்படுத்தும் முயற்சியில் பிரித்தானியாவை சேர்ந்த டிம் பீக் ஈடுபட்டுள்ளார். இதன் ஒரு கட்டமாக, ஆராய்ச்சி மையத்தில் இருந்து வெளியேறி முதன் முதலாக விண்வெளியில் நடந்து சென்றுள்ளார்.



## அகதிகளுக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு

### 516 குற்றச்சாட்டு - 100 பேர் வரையில் இனங்காணப்பட்டுள்ளது

ஜேர்மனி

சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் 7 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகள் ஜெர்மனியில் குடியேறியுள்ளனர்.

இந்நிலையில், மேற்கு ஜெர்மனியில் உள்ள கொலோன் நகரில் கடந்த ஜனவரி 1 ஆம் திகதி நள்ளிரவில் அந்நகர மக்கள் சாலை, தெருக்களில் கூடி வழக்கமான உற்சாகத்துடன் புத்தாண்டை வரவேற்றனர். அப்போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 அகதிகள் மதுபோதையில் பெண்களிடம் அத்துமீறி நடந்ததாகவும் 2 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் 500ற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு இலக்கானதாகவும் அவர்களிடம் இருந்து பணம் கொள்ளையிடப்பட்டதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வன்முறையில் ஈடுபட்டதாக சுமார் 100 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், சட்டத்தை மீறும் அகதிகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும், அவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என ஏஞ்சலா மெர்க்கல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்

## குண்டு தாக்குதலில் 18 பேர் பலி உரிமை கோரியது ஐ.எஸ்

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமையப் பெற்றுள்ள வர்த்தக கட்டிடத் தொகுதியினுள் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. தற்கொலை அங்கியை அணிந்த குண்டுதாரி கட்டிடத் தொகுதியினுள் நுழைந்து தற்கொலை அங்கியை அங்கு விட்டுச் சென்றுள்ளதாக உத்தியோகப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த வெடிப்பு சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் வரை காயமடைந்துள்ளனர். தாக்குதல் சம்பவத்திற்கு ஐ.எஸ் பயங்கரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்.

ஷியா முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலை நடத்தி வரும் ஐ.எஸ் பயங்கரவாதிகள் புறக்கணிக்கப்பட்ட பிறமதத்தினர் ஒன்றுகூடும் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு நகரான முஹ்தாதியாவில் நடத்தப்பட்ட குண்டு தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 50 பேர் வரை காயமடைந்துள்ளனர். மற்றுமொரு தாக்குதல் தென் கிழக்கு நகரான பாக்தாத்தில் நடத்தப்பட்டுள்ளது.

நேபாளம்

## 60செ.மீ இனால் உயரம் குறைந்தது இமயமலை

கடந்த 2015 ஆண்டு ஏப்ரல் மாதம், நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 8,000 பேர் உயிரிழந்தனர். இந்த நிலநடுக்கம் காரணமாக இமயமலை 60 செ.மீ. வரை உயரம் குறைந்துள்ளதாக, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆய்வில், நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட அபாயகரமான பிறழ்வு, நேபாளத்துக்கு கீழே உள்ள புவி ஓடு விரிசலில் கி.மீக்கு கீழே சாய்தளத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், பொருட்கள் தொடர்ந்து சரிந்து இந்த சாய்தளத்தை உயர்த்தி வருகின்றன. நிலநடுக்கத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு மலை வளர்வதாக தெரிந்தது. தற்போது நிலநடுக்கம் அதனை மாற்றியுள்ளது.

2015 ஏப்ரலில் ஏற்பட்ட திடீர் அதிர்வால் வெளியான அழுத்தம் மலைகளை கீழிறக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அகதிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்

சிரியாவிலிருந்து ஐரோப்பாவுக்குள் நுழைய முயலும் அகதிகளை துருக்கி கைதுசெய்து தடுத்துவைப்பதாகவும் சிரியாவுக்கே திருப்பி அனுப்புவதாகவும் பிபிசி நடத்திய புலனாய்வு விசாரணையில் தெரியவந்துள்ளதாக தெரிய வருகின்றது.

எனினும் சுமத்தப்பட்டுள்ள இக் குற்றச்சாட்டை துருக்கி மறுக்கிறது. தாம் அவ்வாறு திருப்பி அனுப்ப முற்படவில்லை என கூறியுள்ளது துருக்கி. எனினும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

அவுஸ்திரேலியா

## அவுஸ்திரேலியா உத்தியோக ரீதியாக நிராகரித்தது



கடந்தாண்டு நவம்பரில் இடம்பெற்ற பரிஸ் தாக்குதலைத் தொடர்ந்து, சிரியா, ஈராக்கிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கெதிராகப் போரிடுவதற்கு அதிக பங்களிப்பை வழங்குமாறு, ஐக்கிய அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் டிசெம்பரில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கப் போவதில்லையென்றவாறான சமிக்ஞையை, பிரதமர் மல்கொம் டேர்ண்புல் வெளிப்படுத்தியிருந்த நிலையில், பாதுகாப்பு அமைச்சர் மரிஸ் பெய்ன், தற்போது அக்கோரிக்கையை உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை, பிரதமர் டேர்ண்புல், வொஷிங்டனில் வைத்து, சில நாட்களில் சந்திக்கவுள்ளதோடு, அச்சந்திப்பு, பயங்கரவாதம் தொடர்பாகக் கவனஞ்செலுத்தும் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே, தற்போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுவிக்கப்படாத இடங்கள் என்பதாலே

பலாலி

### கலந்துகொண்டேன் - மாவை தெரிவிப்பு



தேசிய பொங்கல் விழா இடம்பெற்ற ஆலயம் அமைந்துள்ள பலாலி பகுதி இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ள மக்களின் இருப்பிடங்கள் என்பதால் இதனை நேரடியாக பிரதமரிடம் எடுத்துக்கூறவே தேசிய பொங்கல் விழா வழிபாட்டில் கலந்து கொண்டேன் என மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

பலாலி ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று இடம்பெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார் இந்நிகழ்வில் மாவை சேனாதிராசா கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த இடங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளது. இதனை விடுவிக்க ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் நாம் ஏற்கெனவே வலியிறுத்தியுள்ளோம்.

இந்த நில விடுவிப்புக்காக நாம் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். எனினும், இன்னமும் முழுமையாக விடுவிக்கபடவில்லை. இப்போது தான் பகுதி பகுதியாக விடுவிக்கின்றனர்.

இவை முழுமையாக விடுவிக்கபடவேண்டும். குறிப்பாக இந்த ஆலயம் அமைந்துள்ள இடமும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

எனவே, இன்றைய வருகையை ஒரு அர்த்தமானதாக அமைத்து ஏற்கனவே எமக்கு அழிக்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாக இந்த நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். இதனை நேரில் தெரியப்படுத்தவே இப்பகுதியில் இடம்பெறும் பொங்கல் விழாவில் கலந்து கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஏனைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

பொங்கல் விழாவின் பின்னர் யாழ்மாநகரில் விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வடக்கின் முதல்வர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்

## தாழ்வுபாட்டில் எந்த மர்மப்பொருளும் சிக்கவில்லை

மன்னார்



மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் தோட்டக்காடு காட்டுப்பகுதியில் மர்மப்பொருள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய குறித்த பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) மாலை அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் தோட்டக்காடு காட்டுப்பகுதியில் மர்மப்பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் காவல்துறைக்குத் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மன்னார் காவல்துறையினர் குறித்த இடத்தினை பார்வையிட்டு, பாதுகாப்புக்களை பலப்படுத்தியதுடன் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

அதன்படி, நேற்று 14ம்திகதி 2.30 மணியளவில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மன்னார் நீதவான் ஆசிர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் குறித்த பகுதியில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீண்ட நேரமாக குறித்த பகுதி மன்னார் நீதவான் முன்னிலையில் அகழப்பட்ட போதும் எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை என தெரிவிக்கபப்படுகின்றது.

## புனர்வாழ்வு பெற்றோருக்கு வாழ்வாதார உதவி

2015 ஆம் ஆண்டுக்கான புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் போரினால் பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோர்கள் ஆகியோருக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கும் திட்டம் வடக்கு மாகாண மீன்பிடி,போக்குவரத்து மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் குறித்த திட்டத்தின் மூன்றாம் கட்டமாக தேவைகளின் அடிப்படையில் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வுகள் அனைத்து மாவட்ட பிரதேச செயலகங்களிலும் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காசோலைகள் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் இன்று (வியாழக்கிழமை) அவரது மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

## போலி நாணயத் தாளை மாற்ற முற்பட்டவருக்கு அபராதம்

அச்சுவேலி



அச்சுவேலி நகரப் பகுதியிலுள்ள கடையொன்றில் போலி நாணயத்தாளைக் கொடுத்து பொருட்கொள்வனவு செய்ய முற்பட்ட உரும்பிராயைச் சர்ந்த நபருக்கு, 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன், தீர்ப்பளித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அச்சுவேலி நகரப் பகுதியிலுள்ள கடையொன்றுக்குச் சென்ற நபர், 1,000 ரூபாய் போலி நாணயத்தாளை கொடுத்து பொருட்கொள்வனவு செய்ய முற்பட்டபோது, கடைக்காரரால் பிடிக்கப்பட்டு அச்சுவேலி காவல்துறையிடம் ஒப்படைக்கப் பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரகசிய காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். சந்தேக நபருக்கு எதிரான போதிய சாட்சியங்களை அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மன்றில் சமர்ப்பித்திருந்ததை அடுத்தே இவ் அபராதம் விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

வல்லெட்டித்துறை

## 2.5லட்சம் பெறுமதியான தொலைபேசி திருட்டு

வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள கைபேசி விற்பனை நிலையத்தினை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் பாடசாலை மாணவர்ள் மூவரை, கடந்த வியாழக்கிழமை வல்வெட்டித்துறைப் காவல்துறை கைது செய்துள்ளனர். கைதான மூவரில் இருவர், வல்வெட்டிப் பகுதியினைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஒருவர், கம்பர்மலை பகுதியினை சேர்ந்த 16 வயதுடைய மாணவர்கள் என தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் குறித்த கைபேசி விற்பனை நிலையத்தினை உடைத்து 2½ இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைத் திருடியிருந்தனர். விசாரணைகளை மேற்கொண்ட இரகசிய காவல்துறையினர், சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

## இராணுவ வீரர் பலி

ஆனையிறவு

ஆனையிறவு பகுதியில் நேற்று ரயில் மோதி இராணுவ காவல் படைப்பிரிவு வீரர் உயிரிழந்துள்ளார்.

யாழிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த கடுகதிப் புகையிரதத்தில் மோதுண்டே புத்தளம், ஆனமடுவ பகுதியை சேர்ந்த 42வயதான மா.நந்தசூரிய என்ற இராணுவ வீரரே உயிரிழந்துள்ளார்.

## மரம் கடத்தியவர் கைது

முல்லைத்தீவு

முல்லைத்தீவு முள்ளியவளை காவல்துறையினரின் அதிரடி நடவடிக்கையால் முதிரைமரக் குற்றிகளுடன் கடத்தல்காரர்கள் கைதாகியுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கழமை விடுமுறை நாள் என்பதை சாதகமாக்கி காவல்துறையினரின் கவனம் குறைவாக இருக்கும் என்று முள்ளியவளை முறிப்பு உடுப்புக்குளம் ஊடாக முதிரை மரக்குற்றிகளை கடத்தி சென்ற கடத்தல்கரர்கள் திருகோணமலை செல்லும் பிரதான வீதியில் வைத்து கைதாகியுள்ளனர்.

குறித்த மரக்குற்றிகளுடன் கைது செய்யப்பட்ட நபரை முல்லைத்தீவு காவல் நிலைத்தில் வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




## இரகசிய அறிக்கையை வெளியிட கூடாது

வன்னிப் போர் குறித்த இரகசிய புலனாய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்படக்கூடாது என புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உயர் அதிகாரியொருவர் சிங்கள நாளிதழ் ஒன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை சூட்சுமமான முறையில் இரகசிய அறிக்கைகளை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது.

வன்னிப் போர் குறித்த இரகசிய புலனாய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கடந்த அரசாங்கத்திடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கோரியிருந்தார். எனினும் கடந்த அரசாங்கம் இந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்திலும் புலனாய்வுப் பிரிவின் இரகசிய அறிக்கையொன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு கிடைக்கப்பெற்றிருந்ததாகவும் அது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் குறித்த புலனாய்வுப் பிரிவு முன்னாள் உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## பொங்கலோ பொங்கல்



பொங்கிய அலையில் - போரில்
போனது உறவு நூறு!
அஞ்சி நாம் நின்றாச்சு!
அல்லல்கள் பழகிப் போச்சு!
பொங்கிய வெள்ளம் - போரில்
பொருளெலாம் அழிந்து போச்சு!
எஞ்சியதுயிர்தான் எனினும்
எண்ணத்தில் வலிமையுண்டு!

எஞ்சிய வாழ்நாளெனினும்
எங்களின் சொந்தம் சேர்ந்து
குஞ்சுகள் குட்டிகளோடு
குடும்பமாய் வாழ வேண்டும்!
சட்டத்துச் சிக்கல் என்ற
சாட்டுக்கள் ஏதுமின்றி
விட்டனர் தமிழர் என்றால்
வீடுகள் தோறும் பொங்கல்!

எங்களை மனிதரென்று ஏற்று
எம் உரிமை தந்து
இங்குள வதை முகாம்கள்
இல்லாமல் செய்ய வேண்டும்!
ஐக்கிய நாட்டு முயற்சி
அரசியல் தீர்வு தந்தால்
வீதிகள் தோறும் நிகழ்ச்சி!
வீடுகள் தோறும் மகிழ்ச்சி!

பொங்கட்டும் நல்லாட்சி இங்கு
போற்றட்டும் புலம்பெயர்வுகளும்!
பொங்கலைப் போல - மனம்
பொங்கட்டும் மகிழ்ச்சி வெள்ளம்!
பொங்கலைப் போல - இனிக்கட்டும்
எங்கள் வாழ்வு!
பொங்கலோ பொங்கல் - தைப்
பொங்கலோ பொங்கல்!

ந.அருட்செல்வன்
ஈச்சந்தீவு

## ஒற்றுமைப்படாவிடில் தமிழ்த்தரப்பு ஓரங்கட்டப்படும்

எதிர்ப்பு அரசியலால்
ஏற்பட்டது இழப்பு
இணக்க அரசியலால்
ஏற்பட்டது ஏமாற்று!

பசப்பு அரசியலால்
பரபரப்பு பேச்சுக்கள்
பயனற்றுப் போனது
தமிழ் மக்கள் கோரிக்கை!

ஏற்பட்ட இழப்புக்கு
எதுவுமில்லை தீர்வுத் திட்டம்
எதிர்பார்த்த தரப்பின்று
ஏமாந்த கிளிக்கூட்டம்!

தமிழர் தரப்பிங்கு
தடு மாறும் வரைக்கும் – எவர்
அழுதாலும் தொழுதாலும்
அமையாது அரசியல் தீர்வு!

கவிக்குயிலன் சேனையூரான்



## இருந்திருக்கும்?

அரப்பா - சதாராவோ
அடடா, நமதென்றோம்!
இரப்பா நீ பேசாமல்
என்கிறதோ வடவரசு?

திராவிட நா வலந்தீவு
சிற்பத்துச் சோழபுரம்
இராதினிமேல் என்றே
இந்தியா வந்ததுவோ?

மூதேவி தொட்டதனால்
மூவர் பிரிந்தாரோ?
சீதேவி யார்க் கிவைகள்
தேவையிலாச்சங்கதியே!

கைபர் கணவாயைக்
கல்லால் அடைத்திருந்தால்....
சைபர் இருந்திருக்கும்
தமிழோ படர்ந்திருக்கும்?

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)



## ஒவ்வொரு வரிகளும் உனக்கே

காற்றுக் கூட
என்மேல் - கோவம்
கொள்கிறது
காரணம் கேட்டேன்...
சுவாசிப்பது என்னை
நேசிப்பது அவனையா - என்கிறது
அதற்கு தெரியவில்லை
நான் சுவாசிப்பதும்
உன்னையே என்று!

சந்தீபநீ

# இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)




### கந்தளாயில் பிராமணக் குடியிருப்பு :

மேற்கூறிய காரணங்களால் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் திருகோணமலையில் வாழ்ந்து வந்த சுதேச பிராமணர்களின் குடித்தொகை படையெடுப்பு, பண்பாட்டுத் தொடர்புகளால் கணிசமான அளவில் அதிகரித்து இருக்குமென ஊகிக்க முடிகிறது.
இதுவே சோழர் காலத்தில் இங்கு சதுர்வேதி மங்கலம் உருவாக வழிசமைத்திருக்கலாம்.

### சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு:–

இச்சாசனம் “சங்கவர்மன்” எனும் பட்டப் பெயருடைய முதலாம் இராஜேந்திர சோழனின் மகன் சோழ இலங்கேஸ்வரனாக பதவி வகித்த காலத்துக் குரியது. இது கந்தளாய்ப் பிராமணக்குடியிருப்பினை “ஸ்ரீ இராஜராஜ சதுர்வேதி மங்கலம்” எனப்பெயரிடப்பட்டு அழைக்கின்றது. இக்கல்வெட்டின் காலம் சோழ இலங்கேஸ்வரனின் பத்தாவது ஆட்சியாண்டுக்குரியது என்பதனை இச்சாசனம் குறித்து நிற்கிறது. இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட வரலாற்று ஆய்வாளர்கள் இச்சாசனம் விபரிக்கின்ற நிகழ்ச்சி கி.பி.1033 இல் அல்லது கி.பி.1047 இல் நடைபெறிருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைக்கின்றனர். எனினும் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் இச்சாசன காலத்திற்கு பல ஆண்டுகள் முன்பிருந்தே வழக்கில் இருந்திருக்கவேண்டுமென கருதப்படுகிறது.

திருகோணமலையில் சுவாமி மலையினை அடுத்துள்ள கடற்பகுதியில் சிவலிங்கத்துடன் மீட்கப்பட்ட இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி (குடமாலை) நாடுங் கொல்லமு(ம்) என்ற ஆரம்பப் பகுதியைக் கொண்டிருந்தது. இது கி.பி. 993க்கு முதல் எழுதப்பட்ட இராஜராஜனின் மெய்க்கீர்த்தி வடிவங்களை ஒத்தது என்பதனால் இலங்கையில் கிடைத்த காலத்தால் முந்திய சோழசாசனமாகக் கருதப்படுகிறது.

எனவே கி.பி. 993 க்கு முன்பாகவே திருகோணமலையில் சோழர்களின் செல்வாக்கு நிலவிவந்ததை ஊகிக்க முடிகிறது. இதனால் இராஜராஜ சோழன் காலம் முதலே இப்பிராமணக்குடியிருப்பு இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதே பொருத்தமானதாக இருக்கிறது.

இராஜராஜ சதுர்வேதி மங்கலமான கந்தளா யில் வாழ்ந்த பெருங்குறிப் பெருமக்கள் கந்தளாய்க் குளத்துடன் தொடர்புடைய விக்கிரமசோழ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்பன தொடர்பிலும், அவற்றின் மூலம் பாசனம் பெறும் வயல் நிலங்களுக்கான வரிதொடர்பாகவும் ஏதோ ஒரு தீர்மானம் நிறைவேற்றியதைச் சொல்கின்றது இக்கல்வெட்டு. கல்வெட்டு முழுமையாக கிடைக்காமையால் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் அறிய முடியாமல் இருக்கின்றது. எனினும் இதையொத்ததாக பேரரசன் முதலாம் இராஜராஜனால் திருச்சியில் உருவாக்கப்பட்ட உய்யகொண்டான் ஆற்றுநீரை முறைப்படுத்தி பயன்படுத்த அமைக்கப்பட்ட ஏரிவாரியத்தைக் குறிப்பிடலாம்.

இவ்வேரிவாரியம் சோழமாதேவி சதுர்வேதி மங்கலம்



என்ற ஊர் சபையோரால் நிர்வகிக்கப்பட்டது. இந்தத்தகவல்கள் மூலம் சோழ இலங்கேஸ்வரன் காலத்தில் கந்தளாய்க்குளத்தின் வாய்க்கால், கண்ணாறு என்பன தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தினை இராஜராஜ சதுர்வேதி மங்கலமாக இருந்த கந்தளாய் கொண்டிருந்தது என்பதை அறியலாம். இக்கூட்டத்தில் அக்காலத்தில் கந்தளாயில் இருந்த அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த ஒரு இளம் பிராமணன் வரிசேகரிப்பாளனாக கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு துண்டங்களாகக் கிடைத்த சோழ இலங்கேஸ்வரன் காலத்து கந்தளாய்ச் சாசனத்தின் கீழ்பகுதி பெருமளவில் சிதைந்துவிட்டபடியால் அதிலுள்ள தகவல்களை முழுமையாக அறிவது கடினமானது.

*தொடரும்.. .. ..*

**வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் தமிழ் மக்கள் பேரவையும்

அ.நிக்ஸன்
www.ibctamil.com

இனப்பிரச்சினை ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் இன்று வரை இந்தியாவின் தலையீடு உள்ளது. குறைந்தது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையேனும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு புதுடில்லிக்குச் சென்று இந்திய பிரதமரை சந்திப்பது அல்லது இந்திய வெளியுறவு அமைச்சருடன் கலந்துரையாடுவது பின்னர் அந்த சந்திப்பு தொடர்பாக அதீத நம்பிக்கையுடன் ஊடகங்களுக்கு கருத்துச் சொல்வது வழமை.

ஆனால் கடந்த ஒரு வருடமாக இந்தியா பற்றிய பேச்சுக்களை விட மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து பேசுகின்ற பண்பை காணமுடிகின்றது. அதுவும் இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதத்துடன்தான் என்று சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

**ஜனாதிபதியின் நம்பிக்கை**

இனப்பிரச்சினை தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் வைக்கமுடியாத நம்பிக்கையை நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ்த்தரப்பு வைத்துள்ளமை ஸ்ரீலங்கா அரசு என்ற கட்டமைப்பை அவர்கள் ஏற்றிருக்கின்றனர் என்ற கருத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் அந்த கூற்று அமைந்துள்ளதை காணமுடிகின்றது. இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணிய காலத்திலும் ஸ்ரீலங்கா அரசு அதன் ஒற்றையாட்சித் தன்மை என்ற கோட்பாட்டை ஏற்று அதன் மூலம் குறைந்தபட்ச அதிகாரபகிர்வை காணலாம் என்ற நம்பிக்கையுடன் கூட்டமைப்பு செயற்பட்டதையும் காணமுடிந்தது.

இந்த நிலையில் நல்லாட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்ற ஆலோசனைகளை முன்வைப்பதற்காக இந்திய மத்திய அரசு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை புதுடில்லிக்கு அழைத்து பேசவுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இந்திய மத்திய அரசு உட்பட மிதவாத சிங்கள தலைவர்கள் என்று கூறப்படுகின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா ஆகியோர் கூட தமிழ்த் தேசியம் சார்ந்து தீர்வை முன்வைக்க விரும்புவதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை....**




கடந்த 60 ஆண்டுகால அரசியல் போராட்டத்தில் சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்ற இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு இந்திய மத்திய அரசுடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தன.

அதுமாத்திரமல்ல இனப்பிரச்சி-னைக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும் என்ற கருத்துக்கள் கூட இந்திய மத்திய அரசினால் அவர்களுக்கு அன்று முதல் போதிக்கப்பட்டும் வந்தன.

**போதனை செய்ய முயற்சி**

ஆனால் விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்திய அந்த 30 வருடகாலத்தில் இந்திய அரசின் அந்த போதனைகளை தமிழ்த் தலைவர்களினால் செயற்படுத்த முடியாமல் போனது.

இருந்தாலும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் அந்த போதனைகளை மீண்டும் செயற்படுத்தக்கூடிய வசதிகள் இந்திய மத்திய அரசுக்கும் அவர்களை அணுகிச் செல்லும் தமிழ்த் தரப்புக்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

இந்த இடத்தில்தான் விக்னேஸ்வரன் விதிவிலக்காகிவிட்டார்.

ஆகவே இந்திய மத்திய அரசு அவரையும் அழைத்து போதனை செய்வதன் மூலம் ஸ்ரீலங்கா அரசு என்ற கட்டமைப்புக்குள் நின்று கொண்டும் அதன ஒற்றையாட்சித் தன்மையை பாதுகாக்கும் வகையிலும் தீர்வு ஒன்றை நோக்கி செல்லக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்கலாம் என நம்புகின்றனர்.

தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டதன் பின்னணியில் விக்னேஸ்வரனை இந்தியாவுக்கு அழைக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள சில மூத்த உறுப்பினர்கள் இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் தகவல்.

இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதத்துடன் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெரும்பான்மை ஆதரவுடன் செயற்படும் வடமாகாண சபை தேசியம் என்ற கருத்துநிலையில் இயங்கினால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் குறிப்பாக புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர்கள் கருதியிருக்கலாம்.

ஏனெனில் இந்திய மத்திய அரசு உட்பட மிதவாத சிங்கள தலைவர்கள் என்று கூறப்படுகின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா ஆகியோர் கூட தமிழ்த் தேசியம் சார்ந்து தீர்வை முன்வைக்க விரும்புவதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை.

**இந்திராகாந்தி காலம்**

இந்த நிலையில் விக்னேஸ்வரனை அழைத்து பேசினால் பேரவையின் செயற்பாடுகளை நிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுடன் அவரை ஒத்துப்போகச் செய்வதன் மூலம் தமது புவிசார் அரசியலை முன்னெடுக்க வசதியாக அமையும் என்பதுடன் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் ஆயுட்காலத்-தையும் சிங்கள கடும்போக்கு-வாதிகளையும் திருப்திப்படுத்தலாம் என அவர்கள் கருதியிருக்கலாம்.

இந்திய மத்திய அரசின் இந்த நிலைப்பாடு இந்திரா காந்தி காலத்தில் இருந்தது என்பதுதான் விமர்சகர்களின் கருத்து. ஏனெனில் இந்தியாவில் உள்ள மாநிலங்களை ஒத்த அல்லது இந்திய மாநில அதிகாரங்களையும் விட குறைவான அரசியல் தீர்வு ஒன்றையே அன்று இந்திரா காந்தி தீர்மானித்திருந்தார் என்பதற்கு வரலாறுகள் உண்டு.

இந்திரா காந்தி காலத்தில் அமிர்தலிங்கம், சம்பந்தன் போன்ற தமிழ்த் தலைவர்களுக்கு அரச கௌரவம் இந்தியாவில் கிடைத்து என்ற ஒரு செய்தியைத் தவிர வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அதிகார விடயத்தில் ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சித் தன்மைக்கு பங்கம் ஏற்படக் கூடாது என்பதில் இந்திரா காந்தியும் அவதானமாக இருந்தார் என்பதுதான் உண்மை. ஏனெனில் இந்தியாவில் சமஸ்டி முறை ஆட்சி இருந்தாலும் அங்கு ஒற்றையாட்சி தன்மை கொண்ட அரசுதான் உள்ளது. பிராந்திய பாதுகாப்பு என இந்திரா காந்தி கூறியது இந்தியாவின் ஒற்றையாட்சித் தன்மையை பாதுகாக்கும் நோக்கில் என்பதை தமிழ்த் தலைமைகள் அறியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

அதன் காரணத்தினால் தான் 1987 இல் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமான மாகாணசபை முறையை அவர்கள் அன்று ஏற்றிருந்தார்கள். விடுதலைப் புலிகள் அதனை விரும்பவில்லை என்ற ஒருவகை அச்சத்தினால் பின்னர் 13 ஆவது திருத்தம் தீர்வு ஆகாது என்ற கருத்தையும் தமிழ் தலைமைகள் அன்று முன்வைக்கத் தவறவில்லை.

**சாதகமான அரசியல் சூழல்**

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் இந்தியாவின் விருப்பத்தை முழுமையாக ஏற்கக்கூடிய நிலைமை சம்பந்தன் போன்ற தமிழ்த் தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ளது.


நரேந்திரமோடி காங்கிரஸ் அல்லாத வேறு அரசியல் கட்சியை சேர்ந்திருந்தாலும் ஸ்ரீலங்கா தமிழர் விவகாரத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வு என்பதை ஏற்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் அவருக்கும் உண்டு. ஏனெனில் இந்தியத்தேசிய பாதுகாப்பு என்ற எல்லைக்குள் ஸ்ரீலங்கா விவகாரம் நோக்கப்படுவதால் இந்தியாவில் எந்த கட்சி ஆட்சி அமைத்தாலும் இந்திரா காந்தி அன்று எழுதி வைத்த 13 ஆவது திருத்தச் சட்டம்தான் இறுதிவரை நடைமுறையில் இருக்கும் என்பது வெளிப்படையானது.

ஆகவே தமிழ் தலைமைகள் செய்ய வேண்டியது என்ன? 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள காணி பொலிஸ் அதிகாரங்கள் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் எவ்வாறு பறிக்கப்பட்டன என்பது பற்றிய விடயங்களை அரசியலமைப்பு ரீதியாக சுட்டிக்காட்ட வேண்டும்.

1947 ஆண்டு சோல்பரி யாப்பில் இருந்து தமிழ் மக்களுக்கு ஏற்ற முறையில் இருந்த சட்டங்கள் படிப்படியாக எவ்வாறு இல்லாமல் செய்யப்பட்டன. சட்டத்திற்கு மாறான காணி அபகரிப்புகள், தமிழ் பகுதிகளில் புதிய சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுகள் உருவாக்கப்படு-கின்றமை போன்ற பல்வேறு விடயங்களை உதாரணப்படுத்தலாம்.

தமிழ் மக்களுக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்புகளையும் எடுத்துக் கூறலாம். ஆக அரசியலமைப்பும் அதனைப் பாதுகாக்கின்ற நீதிமன்றமும் சிங்கள மயப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு ஒற்றையாட்சி முறையை ஏற்பது? என்ற கேள்விகள் இயல்பாகவே எழும்.

**இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கோட்பாடு எதற்காக எழுந்தது என்ற சர்வதேச சமூகத்தின் வினாவுக்கும் இயல்பாகவே பதில் கிடைக்கலாம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 87

# எம்மை நாமே தேற்றுவோமாக

(வி.என். சந்திரகாந்தி)



ஒரு குழந்தைக்கு விளையாட்டுக் காண்பிப்பதொன்றும் பெரிய விடயமேயல்ல. ஆனால் அது எதற்காகவேனும் அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டால் அதனை தேற்றுவதென்பது இயலுமான காரியமேயல்ல. அதனை அணைக்க வேண்டும்... முத்தமாரி பொழியவேண்டும்.... ஆள் மாறி ஆள் தூக்கவேண்டும்... கவனத்தை திசைதிருப்ப வேண்டும்... அத்தனைக்கும் பின்னர் தான் அது சிறிது சமாதானமாகி மனம் திறந்து சிரிக்கும்!

எம்மை எமது பிடிவாதத்தை எவராது முன்வந்து தேற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நாம் தான் முன்னெச்சரிக்கையுடன் இருந்து எமக்கு நேரிடக்கூடிய இடர்கள், துன்பங்கள், கவலைகள், தோல்விகள் ஆகியவற்றில் இருந்து விலகி நடக்க கூடியவர்களாக எம்மை ஆளாக்கி கொள்ள வேண்டும்.

"ஆசை தான் துன்பத்திற்கு காரணம்" என்று புத்தர் கூறியதன் உண்மையை நாம் மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். அளவற்ற ஆசைகளால் அளவுக்கதிகமான துன்பம் தான் விருத்தியாகும். எனவே ஆசைகளை அளவுடன் நிர்ணயித்துக்-கொள்ள வேண்டும். கல்வியில் மேதையாக வேண்டும். உயர்ந்த பதவியில் இருக்க வேண்டும். பணக்காரனாக இருக்க வேண்டும். அழகான மனைவியை அடைய வேண்டும். இப்படியே ஆசைகளை திட்டமிட்டுக்கொண்டு போகலாம். ஆனால் அவை எமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பவே சித்திக்கும் என்பதை உள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் கூட" கனவு காணுங்கள் மக்களும் நாடும் முன்னேறும்" என்று கூறிச்சென்றார். அதில் உண்மை இருக்கவே செய்கின்றது. ஆனால் நீங்கள் நிறைவேறாத ஆசைகளை இட்டு துன்பப்பட்டு உங்களை தேற்றுவாரற்று துன்பப்படக்கூடாது. அது முக்கியமான-தாகும். இந்த உலகத்தில் வெளிப்படை-யான ஒரு நியதியுண்டு. அது ஒவ்வொரு-வருக்கும் விதித்ததுதான் அமையும் என்பதாகும். பட்டப்படிப்பை உங்களால் பூர்த்திசெய்ய முடியவில்லையா? நிறைய வாசித்தும் அதிகமாக எழுதியும் உங்கள் தகுதியை நிரூபித்துக்கொள்ளுங்கள். உயர்ந்த பதவி கிடைக்காவிட்டால் போகட்டும் உங்களது சேவைமனப்பான்மை உங்களை சிகரமளவிற்கு உயர்த்தி விடும் என்று நம்பி செயற்படுங்கள். பணக்காரனாக முடியவில்லை என்ற கவலையை விடுங்கள். உங்கள் வருமானம் உங்கள் தேவைக்கு போதுமானதாக இருக்கும் படி செலவுகளை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் எதிர்பார்த்தபடி அழகான நிறமான மனைவி கிடைக்காததையிட்டு கவலை கொள்ளாமல் அவளிடம் குடிகொண்டுள்ள அன்பு, பாசம், பண்பு, அறிவு, ஆகியவற்றி-ற்காக மகிழ்ச்சியடையுங்கள். குறைகள் இருந்தால் அதற்கான பிரதியீட்டை கண்டுபிடிப்பதில்தான். எமது வாழ்கையின் வெற்றி தங்கியுள்ளது.!

ஒரு விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அது பிறரது வாழ்கையை ஒரு போதும் எம்முடன் ஒப்பிட்டு ஏங்க கூடாது என்பதாகும். பிறரை போல நாமும் வாழ வேண்டும் என்று நினைப்பதை போன்ற ஒரு முட்டாள்தனம் எதுவுமே இருக்க முடியாது. சிலர் அப்படி நினைத்து ஓடி ஓடி உழைப்பார்கள். எனது நண்பன் ஒருவன். வெளிநாட்டில் மூன்று "ஷிப்ட்" வேலைசெய்து பணம் சம்பாதிப்பான். வருடம் ஒரு தடவை தனது மனைவி இரு பெண்பிள்ளைகளை தனது சொந்த ஊருக்கு அழைத்துவந்து உறவினர்களுக்கு தம்பட்டம் அடிப்பான். பின்னர் கடனாளியாகி திரும்பிப்போவன். இதில் என்ன சுகம் இருக்க முடியும்?. ஒருவன் மன அமைதியுடன் வாழ்வதற்கு வருவாய் எவ்வளவு அவசியமோ அதே போன்று சேமிப்பும் கட்டாயமாகும். எமது செலவுகள் எப்போதும். இன்று போல சிக்கனமாக கட்டுப்பாட்டுக்குள் இருக்க மாட்டாது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அவற்றிற்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். இனி வருவாயானது ஒரு வழியில் சம்பாதிக்கப்படுவதாகவும் இருக்க கூடாது. மாற்று வருவாய் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்போதுதான். ஒரு வருவாய் தடைப்பட்டாலும். மற்ற துறைகளில் கிடைக்கபெறும் வருவாய் வாழ்க்கை பாதையை சுமூகமாக ஓட்டிச்செல்ல வழிவகுக்கும். அந்நேரத்தில் எவரிடமும் சென்று கையேந்தும் நிலை ஏற்படாது.

அதே போன்று உங்களுக்கு கிடைத்துவிட்ட உத்தியோகத்துடனோ பதவியுடனோ திருப்தி-யடையாதீர்கள். உங்கள் கல்வியையும் ஆற்றலையும் மேம்படுத்துவன் மூலம் ப்தவியையும் வருமானத்தையும் உயர்த்திக்கொள்ளும் வழியை பாருங்கள் ஒருபோதும் பிறரிடமிருந்து என்ன உதவியை பெறலாம் என்று கணக்கு போடாதீர்கள் இந்நாட்களில் பலர் வெளிநாட்டில் இருக்கும் தமது உறவினர்களிடம் யார் யாரிடம் உதவி பெறலாம்... என்னென்ன உதவிகள் பெறலாம் என்று கணக்கு போட்டு வாழ்கிறார்கள். அதைபோல ஒரு பெரிய தவறு வேறெதுவும் இருக்க முடியாது. எமது சகோதரங்களாக இருந்தால் கூட அவர்களுக்கும் நிச்சயமாக பிள்ளைகள் வளர்ந்து விட்டிருப்பார்கள். அவர்களுக்கென்றும் தனியாக செலவுகள் இருக்கும். தமது பெற்றோர் கஷ்டப்பட்டு உழைத்து தாய்நாட்டில் உள்ள தமக்கு அறிமுகம் இல்லாத உறவினர்களுக்கு உதவி செய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள். அதனால் நீங்கள் அவமானப்படக்கூடிய சந்தர்ப்பம் தான் உருவாகும். பதிலுக்கு நீங்கள் பிறர்க்கு என்ன உதவி செய்ய முடியும் என்பதை தீர்மானித்து அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அதனால உங்களுக்கு ஆத்ம திருப்தி உண்டாவதுடன் உங்கள் பெருமையும் உயரும். நாம் நாமாக இருக்கவும் திருப்தி படவும் பழகவேண்டும். பிறரது உயர்வை எண்ணி ஆடம்பரத்தை நினைந்து அங்கலாய்க்க கூடாது.

சொல்லப்போனால் மற்றவர்களது வருவாய் எமக்கு கிடைக்கும் என்று எண்ணி வாழ்வதல்ல வாழ்க்கை. மற்றவர்களது அன்பு பாசம் எமது பக்கம் திரும்ப வேண்டும். அதுவே உண்மையான மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தரும்.

அதற்காக எம்மை நாம் சீரமைத்துக் கொள்ள வேண்டும். நல்ல பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும் உயர்ந்த கொள்கையில் எம்மை நிலைநிறுத்த வேண்டும். சேவை மனப்பாங்குடனும் விட்டுக்கொடுப்புடனும் வாழ ஆயத்தமாக இருக்க வேண்டும். மனச்சாட்சிப்படி நடப்பது பிரதானம். புத்தி நடுவு நிலைமை நின்றே சிந்திக்கும். எது சரியோ அதையே சொல்லும். நாம் தவறு செய்வதை புத்தி உணர்த்தினால் அச்செயலை விட்டுவிடவேண்டும்.

எல்லோரும் எம்முடன் அன்பு பூண்டு பழகுவர் என்றும் எதிர்பார்க்கமுடியாது. விரோதிகளும் இருக்கவே செய்வர். அவர்கள் எமக்கு அநீதி இழைப்பதையே இலட்சியமாக கொண்டிருப்பர். அதனால் எமது மனம் பாதிப்பிற்கு உள்ளாகும். அவர் செய்த அநீதிகளை மறந்து விட வேண்டும். அதை விட பிரதானம் அவர்களை எமது வாழ்கையில் இருந்து நீக்கி வைப்பதுடன் மறந்தும் விட வேண்டும்.

எமது பிரதான கடன் எமது மனைவி பிள்ளைகளை நினைந்து அவர்களுக்கு வேண்டியவற்றை உடனுக்குடன் நிறைவேற்றி கொடுப்பதாகும். உங்களதும். குடும்பத்தாரதும் ஆரோக்கியத்-திற்காக ஒரு பகுதி வருவாயை ஒதுக்குவது கட்டாயமாகும். குடும்பம் சுத்தமாகவும். அழகாகவும் ஆரோக்கி-யமாகவும் இருப்பதில்தான் மன மகிழ்ச்சி தங்கியுள்ளது.

ஆரோக்கியம் கெட்டால் எல்லாமே போய்விடும். வருத்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கையுடன் இருங்கள் . எப்போதும் வைத்தியரின் ஆலோசனையை பெறுங்கள்.

வாழ்க்கை ஏமாற்றங்கள் , தோல்விகள் , இழப்புக்கள் , நிறைவேறாத ஆசைகள் ஆகியவற்றால் நிறைந்ததுதான். நடந்தவை எதுவும் நடந்தவைதான். அவற்றை மனதில் போட்டு அலட்டிக்கொண்டு குழம்ப கூடாது. மன அமைதி பிரதானமானது. எமக்கு ஆறுதல் தரக்கூடிய விடயங்கள் அனேகம் உண்டு.

வாசிப்பு பழக்கம் நல்லது. எமது மனம் கவலை, குரோதம், பழிவாங்கும் எண்ணம் ஆகிய குப்பைகளால் நிறைந்துள்ளது. நல்ல நூல்களை கற்பதன் மூலம் அவற்றை அடியோடு இல்லாமல் செய்ய முடியும். எப்போதும் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். ஒரு சமயத்தில் ஒரு காரியத்தில் தான் ஈடுபட வேண்டும். எந்த வேலையையும் உடனே செய்ய வேண்டும். நாளை என்று ஒரு போதும் ஒத்திப்போடக்கூடாது.

யதார்த்தத்துக்கு புறம்பாக எதுவும் நடக்காது. நடக்கவேண்டியது நடந்தே தீரும். அதை எண்ணி கஷ்டப்படுவதால் பயன் இல்லை. தூக்கமும் ஓய்வும் மனஆறுதல் தரும். இசை எவர் மனதையும் வெல்லும். இயற்கையுடன் இணைந்து நடவுங்கள். இயற்கை காட்சிகள் மனதை வெல்லும். கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கை இருந்தால் அதை போல் அதிர்ஸ்டம் வேறெதுவும் இல்லை. பிரார்த்தனை செய்வதென்பது உங்கள் குறைகளை இறைவனிடம் ஒப்படைப்பதாகும் உங்களால் முடிந்தால் தியானத்தில் அமருங்கள். நீங்களாக செய்வதற்கு முயற்சிப்பதற்கு அங்கு ஒன்றும் இல்லை. "பசித்திரு, தனித்திரு, விழித்திரு!" இவையே அடிப்படை. தியானத்தில் இறைவன் உங்களுக்கு வழிகாட்டுவான். அவனே உங்கள் மனதை பற்றி அழைத்துசெல்வான். நம்பிக்கை வையுங்கள்.!



# பாசமும் அளவுடன் இருத்தல் நன்று




திருகோணமலை மத்தியவீதியில் இடம்பெற்ற ஓர் சம்பவம்.......

ஆறு வயது சிறுமியான பாவனா, பவிகுட்டி என செல்லமாக அழைக்கப்படும் அவளுக்கு பதினைந்து வயது நிரம்பிய அவளுடைய அண்ணா என்றால் மிகவும் விருப்பம். அம்மா, அப்பா அவளுக்குத் தேவையில்லை.

அண்ணா க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுற்றதும் உயர்தர பரீட்சைக்கு படிப்பதற்காக கண்டி சென்று விடுதி ஒன்றில் தங்கிவிட்டான்.

பிறந்து நினைவு தெரிந்த நாள் முதல் அவளுக்கு அனைத்துமாக கடந்த எட்டு வருடங்களாக இருந்த அண்ணா திடீரென்று காணாமல் போனதை விளங்கிக் கொள்ள முடியாத பவிக்குட்டி சாதாரண நிலைக்கு திரும்ப மிகவும் கடினப்பட்டாள்.

எந்நேரமும் அவள் யாருடனோ கதைத்துக் கொண்டே இருப்பாள். எனினும் இதை கவனிக்காது இருந்தனர் பெற்றோர். மாறாக பெற்றோர் அவளிடம் மிகுந்த பாசத்தை பொழிந்தனர். அவள் நினைக்கும் முன்பே அவளது தேவையறிந்து அனைத்தையும் பெற்றுக் கொடுத்தனர். எனினும் அவளது மனதை அவர்களால் அறிய முடியவில்லை.

அச்சிறுமி தன்னை தனிமைப் படுத்தினாள். தனியாகவே இருந்தாள். தனது வேலைகளை தானே செய்து கொள்வாள். சிரிப்பதை பெரிதும் மறந்திருந்தாள். தானாக ஏதேனும் கதைத்து சிரிப்பாள். யாரோ கிச்சு கிச்சு காட்டுவது போல் பாவனை செய்து பெரிதாக சிரிப்பாள். அடுத்த சில கண்களிலேயே எதையோ விறைத்தவாறு பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஏறத்தாள ஆறு மாதங்கள் கடந்த பின்னரே அவளது தாய் இதனை உணரத் தொடங்கினார். என்ன செய்வது தாய் தந்தை இருவரும் வேலைக்குச் செல்பவர்கள்.

பாடசாலையிலிருந்து தந்தை வீட்டிற்கு அழைத்து வந்து அரை மணி நேரம் அவளுடன் இருப்பார் பின்னர் தாய் வீட்டிற்கு வந்து ஒரு மணி நேரம் இருப்பார். அதன் பின்னர் மாலை 5.30 மணி வரை அவள் தனிமையில் தான் அவ்வீட்டில் இருப்பாள்.

இவ்வளவு காலமும் தன் கூடவே இருந்த தன் பாசமான அண்ணாவை பிரிந்தமையை எண்ணி மிகவும் வேதனையில் இருந்த அக்குழந்தை மனம் தன்னை ஆசுவாசப்படுத்தவே தன்கூட தன் அண்ணா இருப்பதாக உணர்ந்து அவன் கூட [illegible] கொண்டாள். அவ்வாறே நடக்கவும் தொடங்கினாள். ஆனால் இதை அவளது பெற்றோர் புரிந்து கொள்ளவில்லை.

பவிக்குட்டியின் பிதற்றலை கண்டு பதறிப்போன தாய் என்ன செய்வதென்று அறியாது தந்தையிடம் கூற அவரும் இரண்டு நாட்கள் அவளை அவதானித்துப் பார்ப்போம் என கூறி அவளை அவதானிக்கத் தொடங்கினர்.

அவளது நடவடிக்கைகள் மிகவும் வினோதமாக காணப்பட்டது. தனியாக விட்டு விட்டு செல்வதால் ஏதேனும் காத்துக் கறுப்பு பட்டிருக்கும் என அவர்களின் பக்கத்து வீட்டு பாட்டி கூறினாள். ஒரு வேளை அது உண்மையாக இருக்கலாம் என எண்ணி பேயோட்டி ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

அவரும் இரண்டு இடங்களில் தகடு இருப்பதாக தெரிவித்து, அதற்கு பல பூசைகள் செய்ய வேண்டும் என முடிந்தளவு காசை கறந்தார். பிள்ளையை காப்பாற்ற வேண்டுமே எனும் எண்ணத்தில் அவர்களும் பார்த்தும் பார்க்காமலும் பணத்தை அள்ளி இறைத்தனர். என்ன செய்தும் சரி வரவில்லை.

ஒரு நாள் திடீரென்று இவர்கள் இருவரையும் பார்த்து கத்தி கத்தி அழுதாள். பித்துப் பிடித்தவள் போல் ஏதேதோ செய்தாள். எதைப் பார்த்தாலும் கத்திக் கூச்சலிட்டாள். எப்படி கட்டுப்படுத்துவது என்றே தெரியவில்லை அவளது பெற்றோருக்கு....

பாசம்.... அவளது அண்ணா விற்கு, அவன் தங்கை ஆபத்திலிருப்-பதை உணர்த்திற்று. யாரிடமும் தெரிவிக்காமல் உடன் புறப்பட்டு வந்தான். தங்கையின் நிலையை பார்த்த அவன் வாய் விட்டு கதறி அழுதான். அவன் கூப்பிட்டும் கூட தங்கை வர மறுத்தாள். சரியாக அரை மணி நேரம் அண்ணாவின் கண்களையே பவியின் கண்கள் பார்த்தன. அதில் எதையோ தேடினாள். தேடியது கிடைத்தது போல ஓடி வந்து கட்டி அணைத்துக் கொண்டாள். அதன் பிறகே அனைவருக்கும் அவளது பிரச்சினை என்ன என்பது புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## ப்ரேமத்திற்கு முடிவே இல்லை?

மலையாள சினிமாவில் கடந்த வருடம் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற படம் ப்ரேமம். இப்படம் கேரளாவை விட சென்னையில் தான் அதிக நாட்கள் ஓடியது.இப்படம் சமீபத்தில் 230 நாட்களை தொட்டது. அன்றுடன் அந்த படம் தூக்கப்படுகின்றது என கூறப்பட்டது.ஆனால், மீண்டும் சென்னையின் பிரபல மாலில் இந்த படத்தை திரையிட்டுள்ளனர். இன்றும் இப்படத்திற்கு 60%க்கு மேல் கூட்டம் வருகிறதாம்.

## ரஜினி முரகன் விமர்சனம்

நடிகர்: சிவகார்த்திகேயன்
நடிகை: கீர்த்தி சுரேஷ்
இசை: டி. இமான்
பொன்ராம் இயக்கத்தில்
ரஜனி முரகன் அடுத்த வார இயத்தில்



## விஜய்தான் என் ரோல் மாடல் அப்போ அஜித்......

சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள ரஜினி முருகன் பல்வேறு இழுப்பறிகளை கடந்து இன்று வெற்றிகரமாக உலகம் முழுவதும் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிவகார்த்திகேயன் சமீபத்தில் அளித்த பேட்டியில், விஜய், அஜித்திடம் இருந்து என்ன கற்றுகொண்டீர்கள் என்று கேட்டகப்பட்டது. அதற்கு அவர், கண்டிப்பாக ஒரு கமர்ஷியல் ஹீரோவாக வரவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு விஜய் சார் தான் ரோல் மாடல். எனக்கு அப்படி தான்.

ஒரு உதவியை யாருக்கும் தெரியாமல் எப்படி செய்ய வேண்டும் என்பதை அஜித் சாரிடம் இருந்து கற்றுக்கொண்டேன் என கூறியுள்ளார்.

## தெறி பற்றி அட்லீயின் அட்டகாசமான பேட்டி!

விஜய்யின் தெறி படம் தற்போது இறுதி கட்டத்தை எட்டி வருகிறது. தாணு தயாரிப்பில் உருவாகி வரும் தெறி படத்தை அட்லீ இயக்கி வருகிறார். ஜி.வி.பிரகா' இசையமைத்து வருகிறார். இப்படத்தில் விஜய் ஏ.விஜய்குமார் ஐ.பி.எஸ் என்னும் கதாபாத்திரத்தில் மிகவும் நேர்மையான காவல்துறை அதிகாரியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் அட்லீ சமீபத்தில் முன்னணி வார இதழ் ஒன்றிற்கு தெறி படம் பற்றி பேட்டியளித்துள்ளார். அதில், இதுவரை வந்த போலீஸ் கதாபாத்திரங்களை காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான ஒரு கதை.
சமூகத்தை திருத்த வரும் ஒரு நேர்மையான போலீஸாக விஜய்யின் வேடம் தெறியில் வடிவமைக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.



## ஏன் ? நயன்தாரா

தென்னிந்திய சினிமாவில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகை நயன்தாரா. இவருக்கு சமீபத்தில் ஒரு விருது விழாவில் அமிதாப் பச்சன் விருது கொடுக்கப்பட்டது. இவ்விருதை அறிவித்த சுஹாசினி பேசுகையில் இன்று காலை அமிதாப் பச்சன் எதற்காக நயன்தாராவிற்கு இந்த விருதை கொடுக்கிறீர்கள் என போனில் கேட்டார்.அதற்கு நான், தமிழ் சினிமாவை ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்து வருகின்றனர். ஆனால், தொடர்ந்து 12 வருடங்களாக முதல் இடத்திலேயே நயன்தாரா இருக்கிறார், அதுமட்டுமில்லாமல், அவரை திரையில் காட்டினாலே ரசிகர்கள் விசில் அடித்து ஆரவாரம் செய்கிறார்கள், ஒரு சூப்பர் ஸ்டாருக்கு நிகராக நயன்தாராவின் வளர்ச்சி உள்ளது என நான் அவரிடம்- கூறினேன் என்று சுஹாசினி தெரிவித்துள்ளார்.

# திரை விமர்சனம்

## பூலோகம்

நடிகர் : ஜெயம் ரவி
நடிகை : த்ரிக்ஷா
இசை : ஸ்ரீகாந்த் தேவா
ஒளிப்பதிவு : சதீக்ஷ்குமார்
இயக்கம் : கல்யாண கிருக்ஷ்ணன்

தன் அப்பா தற்கொலைக்குக் காரணமானவரின் மகனை பாக்ஸிங்கில் ஜெயித்து அவனை கொல்ல வேண்டும் என சிறு வயதிலிருந்தே வெறியோடு வளர்ந்து நிற்கிறார் பூலோகம் ஜெயம் ரவி. இந்நிலையில், டிவி சேனல் நடத்தி வரும் பிரகாஷ்ராஜ், ஜெயம் ரவியின் வெறியை வைத்து பணம் சம்பாதிக்க திட்டமிடுகிறார். ஜெயம் ரவிக்கும் எதிராளிக்கும் இடையே பெரும் போட்டியை ஏற்பாடு செய்கிறார். இதற்காக ஜெயம் ரவியுடன் பல ஒப்பந்தங்களில் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்.

இந்த போட்டியில் ஜெயம் ரவி வெற்றி பெறுகிறார். இந்த போட்டியின்போது தன்னால் தாக்கப்பட்ட எதிராளி, உயிர்போகும் நிலைக்கு ஆளாவதைக் கண்டு மனம் இறங்குகிறார் ஜெயம் ரவி. இதனால், இனி பாக்சிங் வேண்டாம் என்று முடிவுக்கு வருகிறார். மேலும் எதிராளியை காப்பாற்றும் முயற்சியிலும் ஜெயம் ரவி ஈடுபடுகிறார். இது தெரிந்து அதிர்ச்சியடையும் பிரகாஷ் ராஜ், ஜெயம் ரவியை மீண்டும் பாக்ஸிங்கில் களமிறங்க வைக்க சில பல தில்லு முல்லு வேலைகளில் இறங்குகிறார். இதன் பிறகு என்னென்ன களேபரங்கள் நடக்கின்றன என்பதே பூலோகம்.




ஜெயம் ரவி நிஜ குத்துச்சண்டை போடும் வட சென்னை இளைஞனாக தோற்றம், உடல் எடை, உடல் மொழி, வசன உச்சரிப்பு என எல்லாவற்றிலும் கடும் உழைப்பைக் கொட்டியிருக்கிறார். அவரின் தொழில் நேர்த்திக்கும், அர்ப்பணிப்பு உணர்வுக்கும் ஒரு சபாஷ்போடலாம்.

டுயட் இல்லாத, கதையில் பயணிக்கின்ற நாயகி கேரக்டர் த்ரிஷாவுக்கு, கொஞ்ச காட்சிகளே வந்தாலும் ரசிக்க வைத்திருக்கிறார். வழக்கம் போல் வில்லத்தனத்தில் மிரட்டி ரசிகர்களின் பாராட்டை பெற்றிருக்கிறார் பிரகாஷ் ராஜ். இரண்டாம் பாதியில் களமிறங்கும் ஹாலிவுட் பாக்ஸர் நாதன் ஜோன்ஸ், தனது உருவத்தாலேயே மிரட்டுகிறார். ஜெயம் ரவியும் இவரும் சண்டை போடும் காட்சிகள் சீட்டின் நுனிக்கே ரசிகர்களை இழுக்கிறது.

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் விளையாட்டு வீரர்களை வியாபார பொருளாக்கி வருகிறார்கள் என்பதை வெளிப்படையாக கூறியிருக்கிறார். எஸ்.பி.ஜனநாதனின் வசனங்கள் படத்திற்கு பலமாக அமைந்திருக்கிறது. குறிப்பாக ஜெயம் ரவி பேசும் வசனங்கள் சிறப்பாக அமைந்திருக்கிறது. நீண்ட இடைவேளைக்குப் பிறகு இப்படம் வெளிவந்திருந்தாலும் ரசிகர்களை துளிகூட ஏமாற்றவில்லை என்றே சொல்லலாம்.

**மொத்தத்தில் பூலோகம் ரசிகர்களை பூர்த்தி செய்யும்.**

## தீபாவளிக்கு ஒன்னு, பொங்கலுக்கு ஒன்னு.....

வேதாளம் படத்தையடுத்து அஜித் மீண்டும் சிவா இயக்கத்தில் நடிக்கவிருக்கிறாராம். அதோடு அறுவை சிகிச்சை செய்து கொண்டு தற்போது வீட்டில் ஓய்வெடுத்து வருவதால் அடுத்த படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்கு தாமதமாகும்.

இதனால் படமும் தாமதமாகவே வெளியாகும் என்பதால் அஜித் ரசிகர்கள் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். எனவே தனது ரசிகர்களை மனதில் வைத்து அதிரடி முடிவு ஒன்றை எடுத்துள்ளாராம் அஜித். அதாவது சிவா மற்றும் வி'ணுவர்தன் இந்த இரண்டு இயக்குனர்களின் படங்களில் ஒரே நேரத்தில் நடிக்க முடிவு செய்துள்ளாராம் அஜித். சிவா படத்தை தீபாவளிக்கும், வி'ணுவர்தன் படத்தை பொங்கலுக்கும் வெளியாகும் வகையில் தனது பணிகளை முடித்துக் கொடுக்க திட்டமிட்டு இருக்கிறாராம் அஜித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## இரு திரை கொண்ட அதிநவீன கைபேசிகள்.!!

இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பலான ஸ்மார்ட்போன்களில் ஒரு திரை மட்டுமே இருக்கின்றது. ப்ளிப் போன்களின் காலம் முடிந்து விட்டது என்ற நிலையில் சில ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் ப்ளிப் போன் வடிவில் இரு திரை கொண்ட கருவிகளை தயாரிக்க துவங்கியுள்ளனர்.

கியோசெரா ட்யூரா எக்ஸ்ஏ 2.4 இன்ச் திரை கொண்ட இந்த கருவியில் க்யூவிஜிஏ டிஸ்ப்ளே மற்றும் 256 எம்பி ரேம் வழங்கப்பட்டுள்ளது.

எல்ஜி tp10 5.7 இன்ச் குவாட் எச்டி மற்றும் 2.1 இன்ச் சிறிய திரை கொண்ட கருவி என்பதோடு 4 ஜிபி ரேம் மற்றும் 16 எம்பி ப்ரைமரி கேமரா போன்றவை இந்த கருவியின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் எனலாம். சாம்சங் கேலக்ஸி கோல்டன் 3 கடந்த மாதம் சீனாவில் வெளியான இந்த கருவியே தற்சமயம் வரை அதிநவீன சிறப்பம்சங்களை கொண்டிருக்கும் க்ளாம்ஷெல் கருவியாகும். சாம்சங் ரக்பீ 4 அதிநவீன சிறப்பம்சங்கள் கொண்ட பீச்சர் போன் தான் சாமசங் ரக்பீ. 1.3 இன்ச் மற்றும் 2.4 இன்ச் என இரு டிஸ்ப்ளே வழங்கப்பட்டுள்ளது.

டேக் ஹியுர் மெர்டிஸ்ட் இன்.·.பைனட் விலை உயர்ந்த இந்த கருவியில் 2.4 இன்ச் திரை மற்றும் நோட்டிபிகேஷன்களுக்காக ஒரு திரை பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ளது.

யோடா போன் 2 ஆண்ட்ராய்டு சார்ந்த இயங்குதளம் கொண்டிருக்கும் யோடாபோன் 2 கருவியில் 5 இன்ச் மற்றும் 4.7 இன்ச் என இரு திரை வழங்கப்பட்டுள்ளது.




## Internet Explorer இணைய உலாவியின் சகாப்தம் முடிவுக்கு வருகிறது

Internet Explorer

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட பிரபல இணைய உலாவியான Internet Explorer இற்கான அப்டேட் மற்றும் சேவைகளை இன்றுடன் நிறுத்திக்கொள்ளப்போவதாக அந்நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.
இதன்படி 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதியுடன் Internet Explorer 8,9 மற்றும் 10 என்பவற்றிற்கான சேவைகள் மற்றும் அப்டேட்கள் நிறுத்தப்படவுள்ளன.

எனினும் விண்டோஸ் 10 இயங்குதளத்துடன் அறிமுகம் செய்யப்பட்ட Microsoft's Edge இணைய உலாவியிற்கான அப்டேட் மற்றும் சேவைகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே Internet Explorer இணைய உலாவியினைப் பயன்படுத்திவருபவர்கள் Google Chrome அல்லது Firefox அல்லது Microsoft's Edge ஆகியவற்றுள் ஏதாவது ஒரு இணைய உலாவியினை கணினியில்-நிறுவிக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.


## மிரோ எனும் பயன்பாட்டின் தகவல்கள்

நகலெடுத்து ஒட்டுவது மாற்றியமைப்பது போன்ற செயல்கள் எதுவும் இல்லாமலேயே தற்போது நாம் உபயோக படுத்திவரும் ஐட்யூன் எனும் பயன்பாட்டிலிருந்து மிக எளிதாக மிரோ எனும் பயன்பாட்டிற்கு மாறிவிடலாம்.
இது ஆண்ட்ராய்டு பயன்படுத்திடும் அல்லது செயல்படுத்திடும் செல்லிடத்து பேசிகளிலும் டேப்ளெட்களிலும் செயல்படும் திறன்மிக்கது.

அமேஸான், கூகுள் ஆகிய தளங்களிலிருந்து இசைகளை பதிவிறக்கம் செய்து இதில் இயக்கி கேட்டு மகிழலாம். அதுமட்டுமல்லாது, யூட்யூப், போட்காஸ்ட்ஸ், அமேஸான், பிட்டோரண்ட் போன்ற தளங்களிலுள்ள காணொளி காட்சிகளின் எந்தவகையான கோப்பாக இருந்தாலும் பதிவிறக்கம் செய்து இதன்வாயிலாக காட்சியாக கண்டு மகிழலாம்.

கூடுதலாக எந்தவொரு காணொளி காட்சிகளையும் இந்த மிரோவின் உதவியால் அி4.·.r264 ஆகிய எந்தவொரு கோப்பாகவும் மாற்றம் செய்து ஐபோன், ஐபேடு , ஆண்ட்ராய்டு பயன்படும் சாதனம் ஆகிய எந்தவொரு சாதனத்திலும் செயல்படும் வண்ணம் செய்துவிடமுடியும்.

இரு மிரோ பயன்படுத்திடும் சாதனங்கள் வொய்பி போன்ற ஒரே வலைபின்னலில் இணைந்திருக்கும் போது அவைகளுக்கிடையே இசை கோப்புகளையும் காணொளி கோப்புகளையும் பங்கிட்டுகொள்ளவும் பரிமாறிகொள்ளவும் முடியும்.




## சாம்சுங் Smart Hub தொலைக்காட்சியின் சிறப்பம்சங்கள்!




சாம்சுங் நிறுவனம் தனது படைப்பான Samsung Smart Hub தொலைக்காட்சியில் அடங்கியுள்ள சில முக்கிய அம்சங்கள் பற்றி வெளியிட்டுள்ளது.
சாம்சுங் எலக்ட்ரானிக்ஸ் லாஸ் வேகஸில் Samsung Smart Hub தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதில், புதிய வசதிகளாக, Samsung Remote Control உள்ளது, இந்த remote -ல் உள்ள Single Access மூலம் பயன்பாட்டாளர்கள் அனைத்து Menu -க்களையும் பார்வையிட முடியும்.

உதாரணத்திற்கு நேரடி தொலைக்காட்சி, உங்களுக்கு பிடித்த Apps> OTT (Over The top) மற்றும் VOD (Video on Demand) போன்றவற்றை Single Access மூலம் பார்க்கலாம்.

மேலும் இந்த Smart Control Remote, OTT பாக்ஸ், Bluray player, விளையாட்டின் முக்கிய முனைகள், மற்றும் பிற இணைப்புடைய சாதனங்கள் (Connectyed Device) போன்றவற்றை Control செய்கிறது.

பயன்பாட்டாளர்கள், XU Tool- ன் உதவியோடு, இதில் உள்ள அனைத்து பொழுதுபோக்கு அம்சங்களையும் ரசிக்கலாம்.

OTHER

## புத்தம் புதிய லோகோவுடன் Bing

மைக்ரோசொப்டின் தேடுபொறியான Bing லோகோ புத்தம் புதியதாக பச்சை வண்ணக்கலரில் மாற்றப்பட்டுள்ளது.
கூகுளுக்கு அடுத்த படியாக தேடுபொறியில் இரண்டாம் இடத்தில் உள்ள மைக்ரோசொப்டின் Bing.

கூகுளை போன்றே இதிலும் சிறப்பம்சங்கள் உள்ள நிலையில், தற்போது இதன் லோகோ பச்சை வண்ணக் கலரில் முதல் எழுத்தான "B" Capital Letter- ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது

கடந்த 2009ம் ஆண்டு ஜீன் மாதம் அறிமுகம் செய்யப்பட்ட Bing, இன்னும் தொடர்ந்து சிறப்பாக வளர்ச்சியடைய வேண்டும் என சுமை van der Kooi(Microsoft's corporate VP of advertiser) தெரிவித்துள்ளார்.
மேலும் தேடுபொறிகளை பொறுத்த வரையில் சீரான மற்றும் நிதானமான வளர்ச்சியை சந்தித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

bing

## Asus அறிமுகம் செய்யும் புதிய ஸ்மார்ட் கைப்பேசி



சிறந்த ஸ்மார்ட் கைப்பேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்துவரும் நிறுவனங்களுள் ஒன்றான Asus தனது புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியான Asus Live இனை அறிமுகம் செய்துள்ளது.
இக் கைப்பேசியானது 5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 1.3GHz வேகத்தில் செயல்படக்கூடிய Quad Core MediaTek MT6580 processor, பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளன.

மேலும் Android 5.1 Lollipop இயங்குதளத்தில் செயல்படக்கூடிய இக் கைப்பேசியில் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## வலி நிவாரணியாக செயற்படும் இலத்திரனியல் பட்டி

மின்சக்தியினை வெப்ப சக்தியாக மாற்றி வலிகளுக்கு நிவாரணம் தரக்கூடிய இலத்திரனியல் பட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
ReGear Life Sciences எனும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்த Vivy எனப்படும் அணியக்கூடிய பட்டியானது சுயமான முறையில் சிகிச்சை அளிக்கக்கூடியதாக உள்ளது.

இதில் மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்யக்கூடிய மின்கலம், கட்டுப்பாட்டு அலகு, வெப்பத்தை உற்பத்தி செய்யக்கூடிய தூண்டல் சுருள் என்பன காணப்படுகின்றன.
இதன் மூலம் இடுப்பு வலி, தசைகளில் ஏற்படும் வலி, மூட்டு வீக்கம் என்பவற்றிற்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையாகிய விளையாட்டு

சிறுகதை

உத்தியோகத்தர் பலர் தங்கியிருக்கும் காலனி அது. காலை மணி எட்டு. கடும் கோடைக் காலம் அது. எட்டாம் நம்பர் வீட்டில் குடியிருக்கும் கல்லூரி மாணவன் குமார், அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்திருந்து, பேப்பரும் கையுமாகச் சோம்பல் முறித்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்திருந்தான். அந்தக் கோடையிலும் அவனால் குளிர் சாதனத்தின் உதவி கொண்டு எட்டு மணி வரையில் உறங்க முடிந்தது. அவனுடைய இப்பொழுதைய பிரச்சினை இன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது என்பதுதான்.

"ஹாய்! குமார்!" என்று ஆர்ப்பாட்டமாகக் கூவியவாறு உள்ளே நுழைந்தான், குமாரின் கல்லூரித் தோழன் விநோத்.

இருவரும் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு, தங்களுடைய வழக்கமான அரட்டைக் கச்சேரியைத் தொடங்கினார்கள்.

"ஏதாவது அட்வென்சரஸாக நாம் இதுவரை செய்யாத காரியம் ஏதாவது செய்ய வேண்டும். யோசனை பண்ணுவோம்!" என்று சொல்லி விட்டுக் குமார் கையில் வைத்திருந்த செய்தித் தாளை மேலெழுந்தவாரியாக நோட்டம் விட்டான். திடீரென்று துள்ளிக் குதித்தான்.

"ஃபென்டாஸ்டிக் ஐடியா! சொல்றேன் கேள், இப்பொழுது பேப்பரில் அடிக்கடி வரும் செய்தி என்ன? இதோ பார். இன்றைய பேப்பரில் கூட வந்திருக்கே, ஸ்கூட்டரில் வந்து அதிக ஜனநடமாட்டம் இல்லாத தெருக்களில் நடந்து போய்க் கொண்டிருக்கும் பெண்களின் கழுத்துச் சங்கிலியைத் திருடுவது, "செயின் ஸ்நேட்சர்ஸ்." நாமும் இந்தத் திருட்டைச் செய்து பாத்தால் எப்படி இருக்கும்?" என்று உற்சாகமாகக் கேட்டான் குமார்.

"உனக்கு ஏன்டா இந்த திருட்டுப் புத்தி? உங்கப்பா உனக்குக் கொடுக்காத பாக்கெட் மணியா?"

"போடா, மடையா! பணத்துக்காகவா திருடப் போறோம்! ஜஸ்ட் ஃபார் த்ரில். ஒரு அட்வென்சர்! அவ்வளவுதான்."

"வேண்டாம். மாட்டிக் கொண்டால் கம்பி எண்ண வேண்டி வரும். மானம் போய்விடும்!" என்று பயந்தான் விநோத்.

"சரியான தொடை நடுங்கியாக இருக்கிறாயே! பேசாமல் புடவையை எடுத்துச் சுற்றிக்கொள்" என்று குமார் ஒரேயடியாகக் கிண்டல் பண்ண ஆரம்பிக்கவே, விநோத் வேறு வழியின்றித் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான்.

மறுநாளே தாங்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிடலாம் என்று முடிவெடுத்தார்கள். அன்றைய பொழுதை அதற்கான திட்டம் வகுப்பதிலேயே செலவிட்டார்கள்.

அடுத்த நாள் காலை நான்கு மணிக்கு அலாரம் வைத்துக் கொண்டு எழுந்தார்கள். காலை விமானத்தில் ஊருக்குப் போகும் நண்பன் ஒருவனை வழியனுப்பப் போவதாக வீட்டில் பொய்யுரைத்து விட்டு ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

அந்த அதிகாலை வேளையில் அதிக ஆட்கள் நடமாட்டம் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பணக் கொழுப்பினால் உடல் பருத்த சிலர் "வாக்" போய்க் கொண்டிருந்தார்கள். ஸ்கூட்டரை மெல்லச் செலுத்திக் கொண்டு போனார்கள். அந்த அதிகாலை வேளையில் ஈ, காக்கை கூட இல்லை.

திடீரென்று நான்காவது வீட்டுப் பின் கதவைத் திறந்து கொண்டு, கையில் பால் தூக்குடன் ஒரு பெண்மணி கேட்டைத் திறந்துகொண்டு தெருவுக்கு வந்தாள். மணி சுமார் ஐந்து இருக்கும். அந்த மங்கலான வெளிச்சத்திலும் அவள் கழுத்தில் மின்னிய தங்கச் சங்கிலியைக் கவனித்து விட்டார்கள் குமாரும், விநோத்தும்.

மெதுவாக ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு போய் அவள் அருகில் நிறுத்தினான் விநோத். பின் சீட்டில் உட்கார்ந்திருந்த குமார் "எச் பிளாக் எங்கே இருக்கிறது தெரியுமா?" என்று தந்திரமாகக் கேட்டுக் கொண்டு அவள் அருகில் சென்றான்.

விநோத் ஸ்கூட்டரின் இஞ்சினை அணைக்காமல் காத்திருந்தான் சடாரென்று குமார் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காண்பித்து, "கூச்சல் போட்டால் குத்திடுவேன். மரியாதையாகச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்துவிடு" என்று முரட்டுக் குரலில் மிரட்டினான்.

தாங்கள் நினைத்த வேலை இவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அப்பெண்மணி உயிருக்குப் பயந்து, மறுபேச்சின்றி நடுங்கும் கரங்களினால் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் ஸ்கூட்டர் சிட்டெனப் பறந்துவிட்டது. ஸ்கூட்டரின் பின் விளக்கு எரியாததால் அப்பெண்மணி ஸ்கூட்டரின் எண்ணைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

குமாரும் விநோத்தும் அன்று முழுவதும் ஆகாசத்தில் தான் பறந்து கொண்டிருந்தார்கள், தங்கள் வீர தீரச் சாதனையை நினைத்து! அவர்களுடைய ஒரே குறை தாங்கள் செய்த காரியத்தை நாலு பேரிடம் சொல்லிப் பெருமை அடித்துக் கொள்ள முடியவில்லையே என்பதுதான்.

மறுநாள் செய்தித் தாள்களில் எங்கோ ஒரு மூலையில் நான்கு வரிகளில் இத் திருட்டைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றபடி காவல்துறையையோ பொது மக்களையோ இந்நிகழ்ச்சி அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை.

இந்நிகழ்ச்சி நடந்து சுமார் ஒரு மாதம் ஆகியிருக்கும். கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டுவிட்டன. குமாரும் விநோத்தும் புது மாணவர்களை ராகிங் செய்வதில் பொழுதை உல்லாசமாகக் கழித்துக் கொண்டிருந்தனர். ராகிங் உற்சாகத்திலும் பரபரப்பிலும் தாங்கள் ஒரு மாதத்துக்கு முன்பு செய்த திருட்டைப் பற்றி மறந்து கூடப் போய்விட்டார்கள் என்று சொல்லலாம்.

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை நேரம். கல்லூரிக்குப் புறப்பட வேண்டிய அவசரம் இல்லாததால், சோம்பல் முறித்துக்கொண்டு பேப்பரும் கையுமாக உட்கார்ந்திருந்தான் குமார். உள்ளூர்ச் செய்திகள் பிரசுரமாகும் பக்கத்தில் வரதட்சணைக் கொடுமையினால் மற்றொரு பெண் தீக்கிரையானாள் என்ற தலைப்பில் ஒரு செய்தியும், இறந்துபோன அப்பெண்ணின் படமும் வெளிவந்திருந்தன.

அப்பெண்மணியைத் தான் எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது குமாருக்கு. ஆனால் சட்டென்று நினைவு வரவில்லை. சிறிது நேரம் மூளையைக் குழப்பிக்கொண்ட பிறகு ஞாபகம் வந்து விட்டது. ஒரு மாதத்துக்கு முன்பு அதிகாலை வேளையில் ஒரு பெண்ணை மிரட்டிச் சங்கிலியை அபகரித்தோமே, அவளேதான் இப்பெண்மணி என்று புரிவதற்கு அதிக நேரமாகவில்லை. ஒருவித ஆவலினால் உந்தப்பட்டவனாக குமார் அச்செய்தியைப் படிக்க ஆரம்பித்தான்.

சாந்திமதி காலனியில் குடியிருக்கும் டிரைவர் சதீஷின் பெண் நிர்மலை, அவள் மாமியாரும், நாத்தனார்களும் சதித்திட்டமிட்டு அவள் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது அவள் மீது மண்ணெண்ணெயைக் கொட்டி, தீக்கு இரையாக்கி விட்டார்கள்.

"அவள் ஒவ்வொரு முறை பிறந்த வீட்டுக்குப் போய்விட்டு வரும்பொழுதும், சைக்கிள், தையல் மிஷின், பீரோ என்று சீர் கொண்டு வர வேண்டும் என்று துன்புறுத்துவார்களாம். இம்முறை பிறந்த வீட்டிலிருந்து திரும்பிய நிர்மல், கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது என்று சொன்னதை நம்பவில்லையாம் அவர்கள். மேற்கொண்டு சீர் கொண்டு வராமல், இருந்த சங்கிலியையும் பிறந்த வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டாள் என்ற ஆத்திரத்தில் இந்தக் கொடூரமான செயலில் இறங்கி விட்டார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளோரின் உதவியினால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிர்மல், இறப்பதற்கு முன்பு கொடுத்த வாக்குமூலத்தில் இவ்விவரங்களைக் கூறினாள்."

செய்தியைப் படித்து முடித்த குமாருக்கு தலை சுற்றியது. தான் செய்த காரியம் ஓர் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்குக் காரணமாக இருந்துவிட்டது என்று நினைக்கையில் துக்கம் தாளவில்லை. வாழ்நாள் முழுவதும் மனசாட்சி உறுத்திக்கொண்டே இருக்குமே என அழுது புலம்பினான் அவன்

# சில கேள்விகளுக்கு பல நேரங்களில் பதிலில்லை

சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இன்று ஒரு கருந்தரங்கில் கலந்துகொள்வதற்காய் ஒஸ்லோ நகரத்தின் மையப்பகுதியல் அமைந்திருக்கும் ஒரு ஐந்து நட்சத்திர விடுதிக்குச் சென்றிருந்தேன்.

கருத்தரங்கின் இடைவேளையின் போது ஏனையவர்களுடன் அமர்ந்து மதிய உணவினை ருசித்துக்கொண்டிருந்த போது ஜன்னலினூடாக விடுதிக்கு வெளியில் என் கண்கள் உலாவின. சற்றுத் தூரத்தில் உறைபனிச்சறுக்குச் சப்பாத்துடன் தம்மை மறந்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் என் கண்ணில் தெரிந்தார்கள்.

எனது இளவரசிகள் இருவரும் நாம் வட மேற்கு நோர்வேயில் ஒரு சிறு கிராமத்தில் வாழ்ந்திருந்த காலங்களில் இந்த உறைபனி சறுக்கு (skating) விளையாட்டில் மிகுந்த விருப்புடையவர்களாக இருந்தார்கள். எனது மூத்தவளுக்கும் இளையவளுக்கும் இடையில் நான்கு வருட இடைவெளியுண்டு. முத்தவளே முதலில் இந்த விளையாட்டைத் தொடங்கினாள்.

நாம் வாழ்ந்திருந்த கிராமத்தில் ஒரு குளம் இருக்கிறது. பனிக்காலத்தில் அது உறைந்துபோகும். அந் நேரங்களில் அக் குளம் ஒரு திருவிழாவைப்போன்று காட்சியளிக்கும். சிறுவர்களில் இருந்து 60 - 70 வயது முதிர் இளையோர் வரை பலரும் உறைபனிச்சறுக்கில் ஈடுபடுவார்கள். குளத்தைச் சுற்றி வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும்.

எனது முத்தவளுக்கு 5 வயதிருக்கும் என்றே நினைக்கிறேன். ஒரு நாள் சிறுவர் காப்பகத்திலிருந்து அவளை அழைத்து வந்துகொண்டிருந்தேன். நாம் அந்தக் குளத்தை கடந்து வரும்போது குளத்தில் பலரும் உறைபனிச்சறுக்கில் ஈடுபடுவதை அவதானித்த அவள் தானும் சறுக்கி விளையாடவேண்டும் என்று அடம் பிடித்தாள். சரி பார்ப்போம் என்று கூறினேன். வீடு வந்ததும் உறைபனியில் சறுக்குவது எப்போது என்று கேட்டபடியே இருந்தாள்.

எனது வீட்டில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் என்னுடன் தொழில்புரிந்த ஒரு நோர்வேஜிய நண்பர் இருந்தார். அவருக்கு இரு குழந்தைகள் இருந்தார்கள். அவர் ஆசிரியர். அவர் மனைவி வைத்தியர். எனது மகளுக்கு அவர்களுடன் மிகுந்த பழக்கமுண்டு. அவர்களுக்கும் அவளில் மிகுந்த அன்பிருந்தது. அவரின் குழந்தைகள் என்னவளை விட சற்று வளர்ந்தவர்களாதலால் எனது குழந்தையுடன் விளையாடுவார்கள்.

அவரின் மகள் ஒரு குதிரையை தன் பெற்றோருடன் சண்டை பிடித்து வளர்க்கத் தொடங்கினாள். அவர்களின் குதிரை லாயம் அவர்கள் வீட்டில் இருந்து சிறிது தூரத்தில் இருந்தது. அவள் குதிரையை தனது வீட்டுப்பக்கமாக அழைத்துவரும் போது எங்கள் வீட்டின் பின்புறமுள்ள வீதியாலேயே அழைத்துவருவாள். எனது மகளுக்கு குதிரை அறிமுகமாகியது இந்நாட்கிளிற்தான்.

எனது மகளுக்கு அந்தக் குதிரை அழைத்துவரப்படும் நேரம் தெரிந்திருந்திருக்க வேண்டும் அல்லது அந்தக் குதிரைக்கு நாம் வீட்டுக்குப் பின்புறம் நிற்கும் நேரம் தெரிந்திருந்திருக்கவேண்டும். அடிக்கடி நாம் சந்திக்க நேர்ந்தது. எனது கையைப் பிடித்தவறாறே குதிரையின் வயிற்றுப்பகுதியை தடவுவதே மகளுக்கு பாதுகாப்பாய் இருந்தது. காலப்போக்கில் மகள் குதிரையின் முகத்தை தடவும் அளவுக்கு முன்னேறிய போது குளிர் காலம் வந்திருந்தது. குதிரையின் நட்பினால் எனது நண்பரின் மகள் எனது மகளுடன் நட்பாகிப்போனாள்.

அந்த வருடம் கடும் குளிர் வீசியது. எங்கள் வீட்டுக்கு அருகே இருந்த குளம் உறைந்துவிட்டிருந்தது. உறைபனிச் சறுக்கு திருவிழாவும் ஆரம்பித்தது. சறுக்கும் சப்பாத்து வாங்கிக் கொண்டோம். குளிர்தாங்கக் கூடிய உடைகளை அணிந்து கொண்டு குளத்திற்கு மகளை அழைத்துப்போனேன். மகளுக்கு சறுக்கும் சப்பாத்தை அணிவித்தேன். அவளால் இரு கால்களையும் ஒருமித்துவைத்துக்கொள்ள முடியாது தடுமாறிய போது, சில அறிவுரைகள் கூறினேன். அப்பா உனக்கு இதைப்பற்றித்தெரியாது என்றாள் மகள். அவள் கூறுவதிலும் பேருண்மை இருப்பதால் எதிர்த்துப்பேச முடியவில்லை என்னால். அந் நேரம், கடவுள் அனுப்பிய தேவதை போன்று வந்தாள், நண்பரின் மகள்.

எனது மகளிடம் சில கட்டளைகளையிட்டாள். எனது கால்களைப் பார், இப்படிச் செய், அப்படிச் செய்யாதே என்றாள். இப்படி ஓடு என்றாள். அங்கு ஒரு அதிசயம் நடந்துகொண்டிருந்தது. எனது மகள் 5 நிமிடங்களுக்குள் மிகவும் நிதானமாக பனியில் சறுக்கிக் கொண்டிருந்தாள். நான் நெருப்பை மூட்டி குளிர் காய்ந்தபடியே மகளுக்கான hotdog தயாரித்துக்கொண்டிருந்தேன்.

இப்படி சறுக்கத் தொடங்கிய எனது மகள் [illegible] தனது தங்கைக்கும் பனியில் சறுக்கக் கற்றுக்கொடுத்தாள். இருவரும், ஓர் நாள் என்னையும் அழைத்தார்கள். கெஞ்சிக்கூத்தாடி தப்பித்துக்-கொண்டேன். தற்போது காலம் என்னை அக்கிராமத்தில் இருந்து பெயர்த்தெடுத்து ஒஸ்லோவிலும், குழந்தைகளை லண்டனிலும் நிறுத்தியிருக்கிறது.

இன்று ஒஸ்லோவின் ஒரு பிரபல்யமான விடுதியில் இருந்தபடியே குழந்தைகள் பனியில் சறுக்கி விளையாடுவதை பார்த்துக்கொண்டிருக்கிறேன். மனம் முழுவதும் நாம் வாழ்ந்திருந்த கிராமத்திலும், எனது மகளுக்கு பனியில் சறுக்கக்கற்றுக் கொடுத்தவளின் நினைவிலும் நனைந்திருந்தது. அந்நினைவுகளில் நனைந்தபடியே உணவு எடுப்பதற்கான வரிசையில் நின்றிருந்தேன்.

எனக்கு முன்னாலிருந்தவரின் முதுகுப்புறத்தைக் கண்டதும், இவரை எங்கோ கண்டிருக்கிறேனே என்று மனம் கூற, எனது கை தன்னிச்சையாக அவரை தட்டிய போது அவர் திரும்பினார்.

அங்கு ஆச்சர்யமான அதியம் காத்திருந்தது எனக்கு, எனது மகளுக்கு பனிச்சறுக்கு கற்பித்தவளின் தந்தையும், எனது நண்பருமானவர் அங்கு நின்றிருந்தார்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் உரையாடினோம். எனது குழந்தைகளைப் பற்றி விசாரித்தார். அவரின் மகள் வைத்தியராக கடமையாற்றுவதாகக் கூறினார். அவளை அன்பாய் விசாரித்ததாய்க் கூறுங்கள் என்று கூறி விடைபெற்றுக்கொண்டேன்.

சில சந்திப்புக்களுக்குக் காரணம் தேடுவதில் அர்த்தமில்லை. அப்படியான ஒரு சந்திப்புத்தான் இதுவும் என்றது மனம்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலக்கழிவு நீரும் நைத்திரேட்டுகளும் தமிழ் மக்களை வடக்கிலிருந்து விரட்டுமா

எம்.ஏ.சி.இக்பால்
www.thinakural.lk

**சில** மாதங்களுக்கு முன்பு சுன்னாகம் மற்றும் அதை அண்டிய பிரதேசங்களில் உள்ள கிணற்று நீரில் எண்ணெய்ப் படிவுகள் காணப்படுவதாக அப்பகுதிகளின் மக்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்புகள் சபை, பட்டினசபை, விவசாய இலாகா போன்ற அரசாங்க காரியாலயங்களில் புகார் தெரிவித்தனர். அவ்அரச அதிகாரிகளும் அப்பகுதி புத்திஜீவிகளும் நீரை பார்வையிட்ட பின்பு கிணற்று நீரை பருக வேண்டாம் என்று கூறி, இது சுன்னாகம் மின்சார நிலையத்தின் எண்ணெய் குதங்களிலிருந்து அதன் கீழ்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள துவாரங்களிலிருந்து எண்ணெய் கசிந்து நீர் ஊற்றுடன் கலந்து கிணறுகளில் உள்ள தண்ணீரில் கலந்துள்ளது. இதனாலேயே கிணற்று நீரில் எண்ணெய்ப்படிவுகள் காணப்படுகின்றன என்ற அபிப்பிராயத்தை சில புத்திஜீவிகள் தெரிவித்தனர். அது காட்டுத்தீபோல் குடாநாடு பூராகவும் பரவி, பத்திரிகைகளின் மூலம் நாடு பூராவும் பரவி அதுபற்றி நிலத்தடி நீர் நிபுணர்களும் அரசியல்வாதிகளும் சுன்னாகம் மின்சார நிலைய எண்ணெய்க் குதங்களை மூட வேண்டும்.

அதனை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று கருத்து கூறவே மக்கள் சுன்னாகம் எண்ணெய்க் குதங்களை மூடு, அதனை வேறு பிரதேசங்களுக்கு மாற்று, எமது அத்தியாவசிய தேவையான உயிர்வாழும் நீரை மாசுபடுத்தாதே, எமது மக்களை போராளிகளாக்காதே என்று பல வித கோரிக்கைகளை வைத்து பல ஆர்ப்பாட்டங்களையும் வீதிமறியல் போராட்டங்களையும் நடத்தினர். இப்போராட்டங்களுக்கு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு எதிராக போட்டியிட இருந்த பல அரசியல்வாதிகள் முன்னின்று செயற்பட்டார்கள். இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற அங்கத்தவர்களும் பிரமுகர்களும் இக்களத்தில் குதித்து கருத்துக் கூறினார்கள். கிணற்று நீரில் எண்ணெய்ப் படிவுகள் காணப்படுவதற்கு சுன்னாகம் மின்சார நிலைய எண்ணெய் குதங்கள் காரணமாக இருக்கலாம் என அதை அகற்றுவதற்கு ஆவன செய்வதாகவும் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். நில நீர் ஆய்வாளர்கள் இந்த எண்ணெய்க் கசிவு சுன்னாகத்தில் இருந்து கே.கே.எஸ். வரையும் கசிந்து செல்கிறது என்றும் கருத்துத் தெரிவித்தனர். இந்நிலையில் வீதிமறியல் போராட்டத்திலும் உண்ணாவிரதத்திலும் ஈடுபட்ட மக்கள் முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண முதலமைச்சர் தோன்றி தான் ஒரு சில மாதங்களுக்குள் இது பற்றி நல்ல நடவடிக்கை எடுத்து ஏன் எண்ணெய்ப் படிவுகள் காணப்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்து அதிகாரிகளின் உதவியுடன் மக்கள் சுத்தமான தண்ணீரை குடிப்பதற்கு, கிணறுகளில் எண்ணெய்ப் படிவங்கள் மிதப்பதை தடுப்பதற்கு ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்தார். அது வரை நீர் வழங்கல்கள் பகுதியினரால் உங்களுக்கு பவுசர் மூலம் நீர் வழங்கப்படும் என்று கூறினார். அதனால் உண்ணாவிரதப் போராட்டமும் வீதிமறியல் போராட்டங்களும் கைவிடப்பட்டன. 2015 ஆகஸ்ட் 18 இல் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. ஐ.தே.க. கூட்டு வெற்றி பெற்றது. ஸ்ரீல. சு.க. ஐ.தே.க. கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது. வட மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

சுன்னாகம் கிணற்று நீர் பிரச்சினையை வைத்து கூட்டமைப்புக்கு எதிராக சில அரசியல் கட்சிகள் பிரசாரங்கள் செய்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிக்க முடியவில்லை. தேர்தல் முடிந்து சிறிது காலத்தில் மீண்டும் கிணற்று நீர் பிரச்சினை கிளப்பப்பட்டது. பவுசர் நீர் விநியோகம் சீராக நடைபெறவில்லை. அதனால் மக்கள் காசு கொடுத்து போத்தல் தண்ணீரை வாங்க வேண்டிய நிலை.

தண்ணீருக்காக பணம் செலவு செய்ய முடியாத பொது மக்கள் தண்ணீரை கொதிக்க வைத்து குடித்து வருகிறார்கள். அதற்கும் முடியாதவர்கள் எது வந்தாலும் வரட்டும் என்ற எண்ணத்தில் எண்ணெய்ப் கசிவு கலந்த நீரையே எந்தவித சுத்திகரிப்புமின்றி தாகத்தை தீர்க்க அப்படியே அருந்துகிறார்கள். இந்த இடைக்காலத்தில் மக்கள் மத்தியில் சில வித்தியாசமான கருத்துக்கள் பரவிவர ஆரம்பித்துள்ளன. சில அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் எண்ணெய்க் கம்பனியிடம் பணம் பெற்றுள்ளார்கள். அதனால் மின்சார நிலைய எண்ணெய்க் குதங்களிலிருந்து எண்ணெய் கசியவில்லை, அது கிணறுகளில் கலக்கவில்லை என்று இப்பொழுது கூறத் தலைப்பட்டுள்ளார்கள் என்ற இதுபோன்ற கருத்துக்கள் பரவிவந்துகொண்டிருக்கிறது. டிசம்பர் 7 ஆம் திகதி, வடமாகாண சபையால், வட மாகாண சபையின் நிபுணர்கள் குழுவின் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

அவ்அறிக்கையில் நிபுணர்கள் பின்வருமாறு கூறினார்கள். தாங்கள் சுன்னாகம், அதை அண்டிய பிரதேசங்களிலுள்ள கிணறுகள் பலவற்றிலிருந்து நீரை எடுத்து அவுஸ்திரேலியாவில் உள்ள ஆய்வு கூடம் ஒன்றுக்கு அனுப்பிவைத்தோம். அவ் ஆய்வு கூடத்திலிருந்து வந்த அறிக்கையின்படி கிணறுகளில் எடுக்கப்பட்ட நீரில் எண்ணெய் கலந்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக நீரில் மலக்கிருமிகள் நிறைந்து காணப்படுவதாகவும் அத்துடன், நைத்திரேட்டுகள் அதிகம் காணப்படுவதாகவும், மலக்கிருமிகளை தண்ணீரை கொதிக்க வைத்து அழித்து ஆறிய பின்பு குடிக்கலாம். ஆனால் நைத்திரேட்டுகளை கொதிக்க வைத்து அழிக்க முடியாது. ஒரு லீட்டர் தண்ணீரில் 50 மில்லி கிராமம் நைத்திரேட்டுகள் காணப்பட்டால் அது தண்ணீர் பாவனைக்கு பாதகமில்லாதது. ஆனால் இங்கு 1 லீட்டர் தண்ணீரில் 50 மில்லி கிராமிலும் பார்க்க பல மடங்கு நைத்திரேட்கள் காணப்படுகின்றன. அது ஆபத்தானது. அதனை இல்லாமல் செய்வதற்கு வழிவகைகளை கண்டு பிடிக்க வேண்டுமென்று நிபுணர்கள் குழுவினர் அறிவித்துள்ளார்கள்.

வட மாகாணத்தில் நிலத்துக்கு கீழ் சுண்ணாம்புப் பாறைகள் உள்ளபடியால் மலக்கழிவு நீர் அவற்றில் தங்கி நின்று கிணற்று ஊற்று நீருடன் கலந்து கிணற்று நீர் அசுத்தமடைகிறது என்றும் கூறியுள்ளார்கள். வட மாகாண மண்ணை தமது உயிரிலும் மேலாக, தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள பிரிக்க முடியாத உறவைப் போன்று வடபகுதி மண்ணுக்கும் மக்களுக்கும் உள்ள அந்த உறவை இவர்கள் பிரிக்க முயன்றது போல் அது அமைந்திருந்தது . எந்த மனிதன் மலம் கலந்த நீரையும் நைத்திரேட்டுகள் நிறைந்த தண்ணீரையும் பருகி உயிர்வாழ விரும்புவான். அவ்வாறு நீர் நிறைந்த நிலத்தில் எவ்வாறு வாழ விரும்புவான்? அவ்வாறான நிலத்துக்காக இனிமேல் தனது உயிரை அர்ப்பணித்து எவ்வாறு போராடுவான் என்பதைப் பற்றி நிபுணர்கள் குழுவும் மாகாண சபையும் யோசித்திருக்க வேண்டும் அல்லவா?

4,5 வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேல் நிபுணர்கள் ஆராய்வு செய்து 200 வருடங்களுக்குப் பிறகு வடமாகாணம் நீரற்ற பாலைவனமாக மாறிவிடும் என அறிக்கையை வெளியிட்டுச் சென்றதாக அக்கால பத்திரிகை செய்தி ஒன்று கூறியது. அதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த மண்ணுக்காக கடந்த 67 ஆண்டுகளாக சாத்வீக போராட்டங்களையும் கடந்த 30 வருடங்களாக ஆயுதப் போராட்டங்களையும் நடத்தி பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் போராளிகளும் தமது இரத்தத்தை சிந்தி உயிரை அர்ப்பணித்த இந்த மண்ணை எப்படி பிரிந்து செல்ல விரும்புவார்கள்? அவர்கள் பிரியமாட்டார்கள்.

ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் சிங்கள இனவாத முதலாளித்துவ அரசுகளும் வடபகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் முற்றாக எடுக்க பல முயற்சிகள் செய்துவருகிறார்கள். அவர்களுக்கு உதவுவதுபோல் இவ்வாறான அறிக்கைகள் உளவியல் தாக்குதலாக அமைந்துள்ளன. இஸ்ரேலியர்களின் அறிக்கை 200 வருடங்களில் வடபகுதி பாலைவனமாகிவிடும் என்ற சூத்திரமும் வட மாகாண சபையின் நிபுணர் குழுவின், மலக்கழிவு நீரும் நைத்திரேட்டுக்களும் என்ற கூற்றும் வடக்கு மக்களின் நிலத்தோடு பிணைந்த, ஆழ ஊடுருவிய உறவை இந்த சூத்திரங்களால் பிரிக்க முடியுமா?

# தைப்பூசப் பொங்கலும் மடை வேள்வியும்





**இ**ந்துக்களின் தொன்மையும் பாரம்பரியமும் மிக்க ஆலயங்களுள் திருக்கோணஸ்வரம் முதன்மை வாய்ந்ததாகும். தக்கனுடைய யாகத்தை அழித்து தாட்ஷாயணியின் உடலத்தைச் சுமந்து வீரபத்திரர் உக்கிர தாண்டவம் ஆடிய பொழுது அம்மனுடைய உடல் அங்கங்கள் ஒவ்வொன்றாக உலகின் 64 இடங்களில் விழுந்தனவாம். அவையே 64 சக்தி பீடங்களாக விளங்குகின்றன. அவற்றின் 18 மகாசக்தி பீடங்களாகும். இவற்றில் முதன்முதலில் தோன்றிய மகாசக்தி பீடம் திருக்கோணேஸ்வரமாகும் என்று புராணங்கள் இயம்புகின்றன. இங்கு சக்தி சங்கரி தேவியாக பரிணமிக்கின்றாள். திருக்கோணேஸ்வரத்தின் பெருமை பாடும் திருக்கோணேசல வைபவம் எனும் வடமொழி பெயர்ப்பு நூலில் திரிகோணபீடத்தைச் சுற்றி ஒன்பது பிரகாரங்கள் உண்டென்றும், அதில் நான்காவதாகிய சந்திரகாந்தப் பிரகாரத்திலே சிவசொரூபமுள்ள ஐம்பத்தொரு சக்திகளும் சதாசிவத்தை தியானித்துக் கொண்டிருக்கும் ஒன்பது சக்திகளும் வசிப்பர் என்று கூறிவிரிகின்றது.

ஸ்ரீ தெட்ஷண கைலாச புராணம் என்பது தென்கயிலை எனப்படுகின்ற திருக்கோணேஸ்வரத்தின் தலபுராணமாகும். இது ஈழநாட்டுச் சைவர்களின் பாரம்பரியத்தில் தனிச்சிறப்பானவோர் இடத்தைப் பெறுகின்றது. குளக்கோட்டன் காலத்திற்கு முற்பட்ட இவ்விலக்கியம் இலங்கையிலே எழுந்த சைவநூல்களிலே மிகப்பழைமை வாய்ந்ததாகும். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைகூறும் ஸ்ரீ தெட்ஷண கைலாச புராணத்தின் ஏழாம் பாயிரமாம் திருநகரச்சருக்கப் படலத்தில், இராவணனைக் கொன்றதினால் ஏற்பட்ட பிரம்மஹஸ்தி தோஷம் நீங்குவதற்காக ஸ்ரீ இராமனும் விபீஷணனும், யோகினியை சூலினியை திக்கெங்கும் தாபித்து ஓங்கும் குன்றெனும் மச்சகேச்சுரத்தை வலம் வந்து போற்றி செய்து விடைபெற்றதாக கூறிச்செல்கிறது. இதில் யோகினி சூலினி என்பார்கள் காளீக்களாகும், எனவே இது இப்பகுதியில் சக்திவழிபாட்டின் வரையறையற்ற அனாதியை ஐயமின்றி எடுத்தியம்புகின்றது.

அத்தோடு, மனுநீதி கண்ட சோழன் வழிவந்த வரராமதேவன் எனும் பெருவேந்தன் இம் மச்சேந்திர புராணக்கதையைக்கேட்டு இன்புற்று, தன் மகனை திருக்கோணாச்சலத்திற்கு அனேக சிலைகளுடன் அனுப்பிவைத்தான் என்றும் மேலும் புராணம் விரிகின்றது. எனவே இதன்படி, இந்த மச்சகேச்சுரத்தைச் சூழ திக்கெங்கும் தாபிக்கப்பட்டிருக்கும் நிகும்ப சூதனைக் காளீக்களின் சிலைகளும் அவற்றிற் சிலவாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இப்புராண வரலாறுகள் திருக்கோணேஸ்வரத்துடனும் அதைச்சூழவுமுள்ள பிரகாரத்துடனும் தொடர்புபட்டதான சக்தி வழிபாட்டு இயக்கத்தின் தொன்மையை ஐயந்திரிபுற எடுத்தியம்புகின்றன. இன்றும் திருகோணமலையின் பல்வேறு இடங்களிலும் அம்பாறையின் வீரமுனையிலும் தெளிவான தொன்மைகாண முடியாதவாறு தான்தோன்றியாக காணப்படும் ஒரே சாயலில் அமைந்த சக்தி விக்கிரகங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. அம்பாறை வீரமுனையில் எழுந்தருளியிருக்கும் காளியம்மன், ஈச்சிலப்பற்று இலங்கைத்துறை பகுதியிலுள்ள செம்பொன்னாச்சி அம்மன், சம்பூர் பத்திரகாளி அம்மன், தம்பலகாமம் சம்மாந்துறை மாரியம்மன் ஆலயத்தில் தாபிக்கப்பட்டுள்ள பத்திரகாளி அம்மன், மூதூர் கங்குவேலிப் பகுதியில் (நீலாப்பளை) நீலாப்பளைப் பத்தினியம்மனாக வழிபடப்படும் தாயம்மன் அல்லது பத்தினிக் காளியம்மன் (மண்ணில் புதையுண்டுவிட்டது).

ஸ்ரீபதியில் (தற்போதய பதவிஸ்ரீபுர) எழுந்தருளியிருக்கும் காளியம்மன். கட்டைபறிச்சான் அம்மன்நகரிலிருந்து அருளாட்சி புரியும் அம்மச்சியம்மன் இவர்களோடு பன்குளம் பறையன்குளம் பகுதியில் வெங்காவில் உறைந்திருந்து காக்கும் எல்லைக்காளி அம்மன், கோணேசப் பெருமானினது எல்லைக் காளிகளாக அமைந்திருந்து அருளாட்சி புரிகின்றனர்.

திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு குளமும் கோட்டமும் கட்டிப் பெருமை கொண்ட குளக்கோட்டு மன்னன் ஆலயத் தொழும்புகளுக்காக கொட்டியாரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளப்பற்று ஆகிய இடங்களில் மக்களை குடியமர்த்தினா-னென்றும், அவர்களுக்குரிய தொழும்புக-ளையும் வரையறுத்து நஞ்சை புஞ்சைகளை வழங்கியிருந்தானென்றும் இப்பகுதிகளில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் மூலம் வரலாறாகின்றன. சோழப்பரம்பரையில் வந்த இப்பகுதியிலுள்ள மக்கள் சக்தி மற்றும் உக்கிர தெய்வங்களை வேள்வி செய்து வழிபட்டு வந்திருந்தார்கள் என்ற வரலாற்று உண்மை இன்றும் இப்பகுதிகளில் கண்கூடு.

செய்குற்றங்களை பொறுப்பதற்கும் துன்பங்களிலிருந்து காத்து அணைப்பதற்கும் அன்னைக்கு நிகர் எவருமில்லை. சிந்துவெளி நாகரிகம் முதற்கொண்டு திராவிட வழிபாட்டுமுறை அனைத்திலும் தாய்த்தெய்வ வழிபாடு முதன்மைபெற்று விளங்கியதை வரலாற்றுச் சான்றுகள் வெளிக்காட்டி நிக்கின்றன.

இறைவனை அம்மையாக பாவித்து தாயே! என விழித்து வழிபடும் போது எம்மையறியாமலேயே மேலும் ஒரு படி இறைவனை நெருங்கியிருப்பதை எல்லோராலும் உணரமுடியும். இவ்விதமே அம்மன் வழிபாட்டுமுறை ஏனையவற்றில் இருந்து சிறப்பாக்கம் பெற்றதெனலாம்.

காளி என்றால் காலத்தை வென்றவள் என்று பொருள்.

தொடரும்.. ..

சு.சிவசங்கரன்
இணைப்பூசகர்
கட்டைப்பறிச்சான் ஸ்ரீ அம்மச்சி ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீன்முரசு

### பாவங்களுக்கு பரிகாரமாகும்

# நோன்பு

உங்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால், (இறந்த) அவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுப்பதுடன் நம்பிக்கையாளரான ஓர் அடிமையை விடுதலையும் செய்ய வேண்டும். இவ்வாறு (பரிகாரம் செய்வதற்கு) அவருக்குச் சக்தி இல்லையெனில், அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பைப் பெற இரண்டு மாதங்கள் தொடராக நோன்பிருக்கட்டும். அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக்கின்றான். (4:92)



போர்க்களங்களில் தமது பக்கத் தரப்பினரைக் கூட தவறுதலாகக் கொன்றுவிடும் சாத்தியம் உள்ளது. சில வேளை எம்மில் உள்ள முஸ்லிமையும் மற்றும் சில வேளை எதிர்க் கூட்டத்தில் இருக்கும் முஸ்லிமையும் மற்றும் சில வேளை சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட முஸ்லிம் அல்லாதவரையும் தவறுதலாகக் கொன்றுவிடும் சாத்தியம் உள்ளது. இப்படித் தவறுதாகக் கொன்று விட்டால் பரிகாரம் காண வேண்டும். பரிகாரம் காண வழியோ, வசதியோ இல்லையென்றால் பாவத்திலிருந்து விடுபடுவதற்காக தொடராக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும் என இந்த வசனம் கூறுகின்றது.

**சத்தியத்தை முறித்தல்:**

சத்தியம் செய்தால் அதை முறிப்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இது தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

உங்கள் சத்தியங்களில் வீணானவற்றிற்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்கமாட்டான். எனினும், நீங்கள் உறுதியாகச் செய்த சத்தியங்களுக்காக அவன் உங்களைக் குற்றம் பிடிப்பான். எனவே, (சத்தியத்தை முறித்தால்) அதற்கான பரிகாரம், நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு வழங்கும் உணவில் நடுத்தரமானதை பத்து ஏழைகளுக்கு வழங்குவதாகும். அல்லது அவர்களுக்கு ஆடை வழங்குவதாகும்.

தொடரும் .. ..

**– இஸ்மையில் –**

# ஜெபம்



நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!... மத் 6:7-9

**திருவிவிலியத்தில் சொல்லப்பட்டிருப்பவை அனைத்தும் உண்மையா?**

இந்தகேள்விக்கு நேரடியாக பதில் சொல்ல இயலாது. திருவிவிலியம் என்பது கடவுளின் வார்த்தை. எழுதப்பட்ட அனைத்தும் கடவுளால் தூண்டப்பட்டு எழுதப்பட்டிருந்தாலும், எழுத்து வடிவில் எழுதியது மனிதரே. தனிப்பட்ட ஒரு ஆசிரியரோ அல்லது ஒரு சமூகமோ தங்கள் இறைஅனுபவத்தை வார்த்தையாக்கிய உன்னதமான நூல். விசுவாச அடிப்படையில் இதில் தவறு ஏதும் இல்லை. விவிலியத்தில் அடங்கியிருப்பது மீட்பு பற்றிய செய்தியாகும். கடவுள் மனிதரை ஏன் படைத்தார்? மனித வாழ்கையின் குறிக்கோள் என்ன? அக்குறிக்கோளை அடைவது எப்படி, இவைபோன்ற கேள்விகளுக்குப் பதில் தருகின்ற போது தவறான போதனையைத் தருவதில்லை. இது ஒரு விசுவாச நூலானதாலும், மனிதரால் பல்வேறு காலக்கட்டத்தில் எழுதப்பட்டு தொகுக்கப்பட்ட நூல் என்பதாலும், தரப்படுகின்ன எல்லா தகவல்களும் அறிவியல் ரீதியாகவும் சரித்திர ரீதியாகவும் 100 விழுக்காடு சரியானவைகளாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

மனித அறிவின் எல்லைக்கு உட்பட்டே அந்த நூல்கள் உருவாகின. விவிலிய நூல்கள் சமய நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகி வளர்ந்தவை. அவற்றில் காணப்படும் செய்தி சமய நம்பிக்கையை நம்மில் வளர்ப்பதற்காக அமைந்ததே தவிர, நமக்கு அறிவியல் சார்ந்த கருத்துக்களை வழங்குவதற்காகவோ வரலாற்று நிகழ்ச்சிகளை விமர்சிப்பதற்காக எழுதப்படவில்லை.

தொடரும் .. .

www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 02

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 18 | ■ | 2 | 12 | 19 |
| 3 | | | | | ■ | | ■ | |
| | | | | 4 | | | | ன் |
| | ■ | ■ | ■ | 5 | | 13 | | |
| ■ | 6 | | | | ■ | | ■ | ■ |
| 7 | | | | | ■ | 8 | 14 | |
| 9 வா | | | | 15 | | | | ■ |
| 10 | | | | | ■ | 11 | | 16 |
| | ■ | 17 | | | ■ | ■ | | சு |

முடிவுத் திகதி : 22.01.2016

### இடமிருந்து வலமாக

1. பல வர்ணச் சிறகுடைய சிறு பறவை
2. கிளியில் சொண்டு
3. இனப்படுகொலை நடந்த ஆபிரிக்க நாடொன்று
4. இதனால் நாளாந்தம் மனிதர்கள் சாகின்றனர்
5. நாயகன் படத்தில் கமலின் நண்பர்
6. மீனவர் குலத்தைக் குறிக்கும் சங்ககாலச் சொல் - வலமிருந்து இடமாக
7. விழுதுகளை வீழ்த்தும்
8. இலங்கையின் நகரமொன்று
9. விமானத்தின் தமிழ்ப் பெயர்
15. இயற்கை மின்சாரம் பெறப் பயன்படும் பொறி
10. அறுக்கப்பயன்படும்
11. முத்துக்களை சுளையாகக் கொண்ட பழம் - குழம்பியுள்ளது
17. குழந்தைப் பசு

### மேலிருந்து கீழாக

1. ஆண்டைக் குறிக்கும் சொல்
2. 'தல' நடிகர்
7. பூவொன்று
13. வாய்கட்டிப் பூசை செய்பவர்
14. யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று - குழம்பியுள்ளது
15. சுவாசிப்பது
16. குற்றம் - ஒத்தசொல்
18. நாடுகளை வெற்றிகொள்ள அரசர்கள் மேற்கொள்வது.
19. லவனின் சகோதரன்

### 01 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 19 ரா | வ | ண | ன் | 20 வெ | ட் | டு | ■ |
| ந் | 2 மா | 3 தா | ய | ம் | கு | 4 தா | ம் | 24 ம |
| 5 தி | ட் | 22 டா | 23 ணி | ■ | ளி | 28 ர | 21 தி | லை |
| 6 ய | ம | ன் | கா | 25 நெ | ■ | ம் | மி | த் |
| ர் | ■ | ■ | ங் | ட் | 7 ன் | ம | ர் | த |
| 8 கு | ள | ம் | 9 க | டு | கு | ■ | 10 தி | ல் |
| 11 ரு | த் | தி | ர | ன் | 13 அ | க | ழ் | 27 வு |
| 12 தி | ரு | ம | ந் | 26 தி | 14 ர | 15 ம் | ர | ம |
| 16 சை | வ | ம் | ■ | 17 ரை | ட் | ■ | 18 ப | சு |

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## 2016 ஆம் ஆண்டிற்கான இராசி பலன்கள்



**துலாம்** : வசீகரமான உடல்வாகும் அழகான முக அமைப்பும் யாருக்கும் பயப்படாத குணமும் கொண்ட தங்களுக்கு எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும் இலாபமும் ஈட்டக்கூடிய அமைப்பாகும். குடும்ப வாழ்வில் எதிர்பாராத நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். ஆவணிக்குப் பின் அனைத்து சஞ்சலங்களும் விலகும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பணக் கொடுக்கல் வாங்கல்கள் சரளமாக காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. கல்வியில் சிறு தடைகள் ஏற்பட்டு பின்னர் முன்னேற்றம் உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவீர்கள். அசையும் அசையா சொத்துக்களால் நன்மை உண்டாகும்.

முற்பாதியில் மங்களகரமான சுப காரியங்கள் கைகூடி வரும். பொருளாதார நிலை மேன்மையாக இருக்கும். பிற்பாதியில் பொருளாதாரம் மேலும் மேன்மையடையும். சில சிக்கல்கள் தோன்றி மறையும்.



**விருச்சிகம்** : நியாய அநியாயங்களை யாருக்கும் பயப்படாமல் எடுத்துரைக்கக் கூடியவர்களான தங்களுக்கு இவ்வாண்டு அவ்வளவு சாதகமான அமைப்பாக அமையாது. வீண் வழக்குகளை சந்திக்க நேரிடலாம். எடுக்கும் முயற்சிகள் தடைகளுக்குப் பின் வெற்றி ஈட்டும். வியாபாரத்தில் ஓரளவே லாபம் கிடைக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. முற்பாதியில் பண நெருக்கடி ஏற்படும். எனவே பெரிய தொகைகளை கொடுத்து வாங்குதலில் கவனம் எடுக்கவும். புதிய நண்பர்களினால் சில பிரச்சினைகள் வரலாம். வேலைப்பளு அதிகம் காணப்படும். உடல் நிலையில் அடிக்கடி சிறு பாதிப்புகள் ஏற்படலாம்.

முற்பாதி சற்று சுமாராகவே காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் சமாளித்து செல்வீர்கள். பிற்பாதியில் மணமாகாதவர்களுக்கு நல்ல வரன் தேடி வரும். பதவி உயர்வுகளும் சம்பள உயர்வுகளும் தடையின்றி கிட்டும். பண வரவுகள் தேவைக்கேற்றபடி இருக்கும். நல்ல இலாபம் கிடைக்கும்.



**தனுசு** : செய்த நன்றியை மறவாத குணமும், வைராக்கியமும் நல்ல மன வலிமையும் உடைய தங்களுக்கு அற்புதமான அமைப்பாகும். எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றியைப் பெற்றுவிடுவீர்கள். பண வரவுகள் சிறப்பாக இருக்கும். சுப காரியங்கள் கை கூடிவரும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பொருளாதார நிலை சிறப்பாக இருப்பினும் சுப காரியங்களுக்காக கடன் வாங்கலாம். கொடுத்த கடன்களை திருப்பிப் பெறுவதில் சிரமம் ஏற்படும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாது இருக்கவும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். நண்பர்களை சற்று அனுசரித்துச் செல்லவும். பிற்பாதியில் எதிர்நீச்சல் போட்டே எடுக்கும் முயற்சிகளை வெற்றி பெறச் செய்வீர்கள். புதிய முயற்சிகளை மேற்கொள்வது தாமதமாகும். பணக் கொடுக்கல் வாங்கலில் நம்பியவர்கள் துரோகம் இழைப்பராதலால் கடன் கொடுப்பதை தவிர்த்தல் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 11

01. உடையில் தீப்பிடித்தால் உடனடியாக செய்யக்கூடாதது?
    1. நிலத்தில் விழுந்து புரளுதல்
    2. நனைந்த சாக்கிகை வைத்தல்
    3. ஓடிச்செல்லுதல்

02. 00:00 மணித்தியாலம் என்பதை சாதாரண நேரத்தில் எழுதினால்
    1. நண்பகல் 12.00 2. நள்ளிரவு 12.00 3. முற்பகல் 12.00

03. மார்ச் 20ந் திகதி தொடக்கம் மே 10ஆம் திகதி வரை உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
    1. 50 2. 51 3. 52

04. அசேதனப் பசளை அல்லாதது
    1. யூரியா 2. அமோனியா 3. கூட்டெரு

05. "எப்பாடு பட்டும் செல்வத்தை சேர்" என்ற கூற்றுக்கு பொருத்தமான பழமொழி யாது?
    1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
    2. நனைந்தவனுக்கு கூதல் என்ன குளிர் என்ன?
    3. திரை கடலோடியும் திரவியம் தேடு

06. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" எனற் பழமொழியின் சரியான கருத்து யா?
    1. மனம் விரும்பினால் யாருக்கும் உதவலாம்.
    2. மனநிறைவே சிறந்த செல்வமாகும் 3. மனத்திருப்தி

07. "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல" என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது?
    1. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் காந்தனுக்கு தந்தை புத்தகம் சிலவற்றை பரிசாகக் கொடுத்தல்.
    2. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் பாலனுக்கு பந்தொன்று பரிசாகக் கிடைத்தல்
    3. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் மாலதிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்கு தடை விதித்தல்.

08. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிளவி அல்லாதது எது?
    1. கலீர்கலீர் 2. விழுந்துருண்டு 3. சுள்சுள்

09. 'ஐ' எனும் ஓரெழுத்துச் சொல்லுக்கான பொருள் அல்லாதது?
    1. மேன்மை 2. அழகு 3. மென்மை

10. செங்கோணத்திலும் பெரியதைக் காட்டும் நேரம் எது?
    1. 3 மணி 2. 6.30 மணி 3. 9.10 மணி

11. ஒரே கருத்தைத் தரும் இரண்டு சொற்களைக் கொண்ட விடையைத் தெரிக.
    1. அடிவானம் - செவ்வானம் 2. அடிவானம் - கீழ்வானம்
    3. அடிவானம் - வானவில்

12. மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
    1. மின்மணி 2.நீராவிப்படகு 3. மின்சூள்

13. அச்சு இயந்திரம் ஒன்றினால் ஒரு நிமிடத்திற்கு 10 பிரதிகள் அச்சடிக்கப்படும். அவ் அச்சு இயந்திரத்தினால் கால் மணித்தியாலத்தில் அச்சடிக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கை யாது?
    1. 1500 2. 150 3. 60

14. பண்ணை ஒன்றில் 200 மாடுகளும், 305 முயல்களும், 200 தாவரங்களும், 325 கோழிகளும் உள்ளன. இப்பண்ணையில் அதிகம் காணப்படுபவை?
    1. மிருகங்கள் 2. பறவைகள் 3. பிராணிகள்

15. இக்கடிகாரம் காட்டும் நேரத்தை ஒருவர் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது இக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?
    1. 6மணி 10நிமிடம் 2. 7மணி 50 நிமிடம் 3. 6மணி 50நிமிடம்.

16. 1500மிலீ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900மிலீ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900மிலீ நீரைக் கவனமாகஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவு யாது?
    1. 900மிலீ 2. 300மிலீ 3. 600மிலீ

17. 6000 ரூபாவின் பங்கானது 2000 ரூபாவின் பங்கிலும் எவ்வளவு ரூபா கூடுதலானது?
    1. ரூபா 4000 2. ரூபா 5000 3. ரூபா 2000



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## தங்க இறகு

விவசாயி ஒருவன் இருந்தான். அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அவனது வயலில் விளைச்சல் பெருகவே இல்லை. "விவசாயி கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்ற பழமொழிப்படி பல ஆண்டுகளாகப் பாடுபட்டும்கூட அவன் வறுமையிலேயே வாடிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் வயலில் ஏர் உழுது விட்டு வரும் போது தகதகவென ஜொலித்த பறவை ஒன்று அங்கிருந்த மரத்தில் அமர்ந்திருந்தது. அதைப் பார்த்த விவசாயி, இந்தப் பறவை நம் வயலைக் காக்கும் தேவதையாக இருக்கக் கூடும். இத்தனை நாள் நாம் இதை வணங்காமல் போனதால்தான் நம்முடைய வயலில் விளைச்சல் பெருகவில்லை. இன்று முதல் இதை நாம் வணங்குவோம் என்று தீர்மானித்தான்.



எனது வயலைக் காத்து வரும் தேவதையே! இவ்வளவு நாட்கள் உன்னைக் கவனிக்காமல் இருந்ததற்காக என்னை மன்னித்துவிடு. உனக்கு என் வீட்டில் இருந்து பழங்கள் எடுத்து வந்துள்ளேன். சாப்பிட்டு என்னை ஆசீர்வதிப்பாயாக என்று கூறி பாத்திரத்தை வைத்து விட்டுச் சென்றான் விவசாயி.

மறுநாள் காலையில் வந்து பார்த்த போது பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்றான் விவசாயி.

நாள்தோறும் மாலை வேளைகளில் விவசாயி பாத்திரத்தை வைத்துவிட்டு வருவான். மறுநாள் காலையில் ஒரு தங்க இறகு இருக்கும். இவ்விதம் மகிழ்ச்சியாகக் காலந்தள்ளிக் கொண்டிருந்த விவசாயி ஒருநாள் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. தனது மகனைக் கூப்பிட்டு அவனிடம் பறவைக்கு பழம் வைத்து விட்டு வருமாறு கூறினான்.

விவசாயி மகனும் தந்தை சொல்லியவாறே அன்று மாலை பழங்களை வைத்து விட்டுச் சென்றான்.


மறுநாள் காலையில் வந்து பார்க்கும்போது அந்தப் பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. அதைப் பார்த்த விவசாயியின் மகன், இந்தப் பறவையைப் பிடித்து தங்க இறகுகளை வேண்டிய மட்டும் பியித்துக் கொள்வோம். எப்படியும் பறவைக்கு தங்க இறகு முளைத்துவிடும். மீண்டும் பியிக்கலாம் என்று நினைத்து அவன் மறுநாள் ஒளிந்திருந்து பறவை பழம் சாப்பிடும் போது பிடித்துக் கொண்டான். அதன் இறகை பியிக்க முயன்றபோது பறவை அவன் கண்களை குத்தி குருடாக்கி விட்டுச் சென்றது.

விவசாயியின் மகன் பேராசையின் காரணமாக பார்வையற்றவன் ஆனான். கிடைப்பதை கொண்டு திருப்தி அடையணும். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான்.

**அளவுக்கு மீறி ஆசை கொள்ளக் கூடாது**

## சிந்திக்க ...

சாத்தியம் என்கிற வார்த்தைதான்
அசாத்தியம் என்பதன் அத்திவாரம்




### பாராட்டு பெறுவோர்

*எஸ்.சதுர்ஷா, கோபாலபுரம், திருகோணமலை*
*ஜே.ஜெயகுமார், 7ம் ஒழுங்கை, இலிங்கநகர்*
*வே.கேசவன், 58 அருணகிரி வீதி, திருகோணமலை*

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

## சிந்தனைத் துளிகள்

- முடியும் என்பதே நம்பிக்கையின் வெற்றி
- எந்தவொரு செயலையும் நாளை செய்யலாம் என ஒத்தி போடக் கூடாது. செய்ய வேண்டியவற்றை வேளையில் செய்தால் வாழ்வில் முன்னேறலாம்.
- ஒற்றுமையும் பிறருக்கு உதவி செய்வதும் தான் ஒரு மனிதனுக்கு முக்கியம்.
- ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே புத்திசாலித்தனம்.
- தந்தை, தாய், குரு, தெய்வம் தான் எம் வாழ்க்கையை மேம்படுத்தும் உயர்ந்த சொத்துக்கள்.

**எஸ்.சதுர்ஷா**
**கோபாலபுரம் மகா வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

I. ஜதின்ஜா நிறுவனத்தில் இருந்து ரூபா 225000 ஐ 20வீத ஆண்டு வட்டியில் 25 சம மாதாந்தக் கட்டணங்களில் செலுத்த வேண்டும்.

1. ஒரு மாதத்தில் செலுத்தப்படும் பணம் எவ்வளவு?
2. ஒரு மாத கடன் பணத்துக்கான வட்டி எவ்வளவு?
3. மாத அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
4. மொத்த வட்டித் தொகையைக் காண்க.

II. கோடாத தாயக்கட்டை ஒன்றின் முகங்கள் 1, 2, 2, 2, 3, 3 என இலக்கமிடப்பட்டுள்ளது. இத் தாயக்கட்டையை இருமுறை உருட்டும் போது பெறப்படும் நிகழ்ச்சிகளின் மாதிரிவெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

பின்வரும் நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவைக் காண்க.
1. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை முதன்மை எண்ணாக இருத்தல்.
2. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை சதுர எண்ணாக இருத்தல்.
3. இரு முறைகளிலும் ஒரே எண்ணாக இருத்தல்.

III. ஜெனி ரூ95000 ஐ எளிய வட்டிப்படி 15வீதம் ஆண்டு வட்டி வழங்கும் வங்கியொன்றில் சேமிப்பில் இடுகிறார்.

1. 2 வருடத்தின் பின்னர் ஜெனியின் கணக்கில் வட்டியாக சேர்ந்திருக்கும் பணத் தொகை யாது?
2. அவர் 6 மாதத்திற்கு ஒரு முறை வட்டியை அவர் கணக்கிலிருந்து எடுப்பார் எனின், எவ்வளவு தொகையை எடுத்திருப்பார்?
3. ஜெனி இதே வீதத்தில் 2 ஆண்டுக்கு கூட்டு வட்டியில் வைப்புச் செய்தால் எவ்வளவு பணம் கூடுதலாக சேர்க்கலாம்?
4. ரூP ஐ 15வீத எளிய வட்டி படி 2 வருடம் சேமிப்பில் இட்டால் கிடைக்கும் மொத்தத் தொகை 13P/10 எனக் காட்டுக.
5. மேலே உள்ள சமன்பாட்டில் பிரதியிடுவதன் மூலம் ரூ65000 ஐ வைப்பிலிட்டால் கிடைக்கும் தொகையைக் காண்க.

IV. 35செ.மீ நீளமும் 14செ.மீ அகலமும் கொண்ட செவ்வக வடிவ காட்போட் மட்டையாகும். இதன் மத்தியில் இரு நீளப்பக்கங்களையும் தொடக் கூடியவாறு மிகப் பெரிய வட்டம் வரையப்பட்டு, வட்டத்தில் 60 பாகை தவிர்ந்த எஞ்சிய பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

1. வெட்டி அகற்றுவதற்கு முன் காட்போட் அட்டையின் பரப்பளவைக் காண்க.
2. அதில் வரையப்பட்ட வட்டத்தின் ஆரை எவ்வளவு?
3. அகற்றப்பட்ட பகுதியில் கூம்பு ஒன்று செய்யப்பட்டது. எனின், கூம்பின் வட்டவடிவான அடியின் சுற்றளவு யாது?

V. தரவுத் தொகுதி ஒன்றில் உண்மை இடை உத்தேச இடையில் இருந்து (-7.5) எனனும் பெறுமானத்தால் விலகி இருந்தது. உத்தேச இடை 77.5 எனின், உண்மை இடை எது?

## பாடம் : வரலாறு

01. 2ம் உலகமகாயுத்தத்தில் பேரழிவினை சந்தித்த ஜப்பான் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ளது.

1. ஜப்பானின் கைத்தொழில் வளர்ச்சிக் கட்டங்கள் மூன்றையும் தருக.
2. 1947ம் ஆண்டு புதிய யாப்பின் படி பேரரசின் பெயரளவு அதிகாரங்கள் இரண்டை தருக.
3. 1950ன் பின் ஜப்பானின் கைத்தொழில் ரீதியான ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கு பங்களித்த காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.
4. 1945ம் ஆண்டின் பின்னர் ஜப்பானில் பல துறைகள் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை கைத்தொழில் துறையின் ஊடாக விளக்குக.

02. கலைச்செல்வாக்கை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட விகாரை
1. போரோபுதூர் 2. அங்கோர்வாட் 3. பலென்கே 4. பர்மியசம்பி

03. கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சிலுவைப்போர் ஏற்பட காரணமான நகரம்
1. அலெக்சாந்திரியா 2. ஜெருசலம்
3. கொன்ஸ்தாந்துநோபிள் 4. ஜெனேவா

04. இலங்கையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த இறுதி ஆட்சியாளன்
1. 6ம் பராக்கிரமபாகு 2. 1ம் பராக்கிரமபாகு
3. 1ம் விமலதர்மசூரியன் 4. 1ம் விஜயபாகு

05. அலெக்சாண்டரின் பிரதிபிம்பம் என கூறிய கல்ஜி வம்ச ஆட்சியாளன்
1. ஜலாலுத்தீன் 2. பிரோஷ் கல்ஜி 3. அலாவுதீன்கல்ஜி 4. முபாரக்ஷா

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பழமொழிகள்

அறிவாற்றல் மிக்க நம் முன்னோர் அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை அழகுறச் சுருக்கமாக பொருள் பொதிந்ததாக ஆக்கிக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய பழமையும் பொருட் செறிவும் பொருந்திய அம்மொழிகள் பழமொழிகள் என்றும் கூறப்படுகின்றன. எடுத்துக் கொண்ட விடயத்தை சுருக்கமாகவும் வலியுறுத்தி அழகாகவும் கூறவும் பழமொழிகள் உதவுகின்றன. அத்தகைய பழமொழிகள் தமிழ் மொழியில் மிகுதியாக உள்ளன.

12.ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் (காலமும் மாறி வரும்)
13.ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது. (கொள்ளக் கூடிய அளவே கொள்ளும்)
14.இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை (திருப்த்தியற்ற மனம்)
15.இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை. (தருமம் செய்)
16.இளங்கன்று பயமறியாது. (வாலிபத் துணிவு)
17.இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (இளமையின் சிறப்பு)
18.இறைத்த கிணறே ஊறும் இறையாத கிணறே நாறும். (தருமத்தின் பெருமை)
19.ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதளம் மட்டும் பாயும். (பண வலிமை)
20.உயரப்பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா? (தகுத்திக்கு மேல் எண்ணாதே)
21.உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவான் ஏன்? (தன்னிடம் இருக்க பிறரிடம் நாடல் அறிவீனம்)
22.உடையவன் பாரா வேலை ஒரு முழமும் கட்டை. (உரியவன் இல்லாக் கருமம்)
23.ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். (ஒற்றுமையின்மை)



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Ex 02: A friend has just come back from holiday. You ask him about it.**

1. (Where/ go)
.............................
2. (go/ alone)
.............................
3. (food/.good)
.............................
4. (how long/ stay there)
.............................
5. (stay/ at a hotel)
.............................
6. (how/ travel)
.............................
7. (the weather/ fine)
.............................
8. (what/ do in the evenings)
.............................
9. (meet anybody interesting)
.............................

***Write a note.***
Roli wants to tell his brother Krish that he has gone to the temple. After that he is going back to the office.

## பாடம் : விஞ்ஞானம்

1. நியூட்டனின் மூன்றாம் இயக்கவிதிக்கு முரணானது எது?
   1. விண்வெளி ஓடங்கள் புறப்படுதல்
   2. மாடியிலிருந்து போடப்பட்ட பந்து நிலத்தில் பட்டு உயருதல்
   3. ஆற்றிலுள்ள படகிலிருந்து தரைக்கு பாயும் போது ஏற்படும் தாக்கம்
   4. வளிமண்டலத்திற்கு அப்பால் செய்மதிகளின் இயக்கம்

2. கிணற்றில் போடப்பட்ட கல்லொன்று அமிழ்வதற்கான காரணமாக இருக்கக் கூடியது?
   1. கல்லின் நிறைக்கு சமனான நிறையுள்ள நீரை இடம்பெயர்த்தல்
   2. கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரின் நிறை கல்லின் நிறையிலும் குறைவாயிருத்தல்.
   3. கல்லின் நிறை கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரின் நிறையிலும் குறைவாயிருத்தல்
   4. கல்லினால் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் நிறை கல்லின் நிறையிலும் அதிகமாயிருத்தல்.

3. கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?
   அ. தகடுகளுக்கிடையிலான தூரம்
   ஆ. மின்னுழையப் பதார்த்தத்தின் தன்மை
   இ. தகடுகளின் பரப்பளவு
   1. அவும் ஆவும் 2. ஆவும் இயும் 3. அவும் இயும்
   4. அ, ஆ, இ மூன்றும்

4. தளவாடி ஒன்றின் முன் 70m தூரத்திலிருக்கும் சிறுவனின் விம்பம் ஆடியிலிருந்து 1.75m இருக்குமாறு அமைய வேண்டுமெனின், சிறுவன் அசைய வேண்டிய திசையும், பெறுமானத்தையும் சரியாகக் குறிப்பது?
   1. ஆடியை நோக்கி 4.75m 2. ஆடியை நோக்கி 5.25m
   3. ஆடிக்கு எதிர்த்திசையில் 1.75m
   4. ஆடிக்கு எதிர்த்திசையில் 4.75m

5. நகப்பூச்சு அகற்றியாக பயன்படும் கரைப்பான் எது?
   1. நாற்குளோரோ எதலீன்
   2. இரு குளோரோ எதேன்
   3. தெரப்பன் தைன்
   4. எக்சேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின்.....

விடுதலை செய்யப்படவில்லை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை, தனியார் காணிகளும், மக்கள் நலன்சார்ந்த கட்டடங்களும் விடுவிக்கப்படவில்லை, காணாமல்போனோரின் விபரங்களை அவர்களின் சுற்றத்தார் இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றார்கள், முன்னாள் போராளிகள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, இராணுவப் பிரசன்னம் குறைக்கப் - படவில்லை, மாகாண அரசின் செயற்பாடுகளில் மத்திய அரசின் தலையீடு குறைந்தபாடில்லை, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் வழங்கப்படவில்லை, மீனவர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை, விதவைகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படவில்லை. இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவல நிலையைப் பட்டியலிட்டுக் கூறிக்கொண்டே போக முடியும்.

எம்மால் பதவிக்குக் கொண்டுவரப்பட்ட இந்த அரசாங்கம் சனநாயகச் சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

எனினும் மூன்று விடயங்கள் இச் சூழலில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் மாற்றம் ஏற்படுத்தல், தமிழ் மக்களின் பிரச்சனையை ஐக்கிய நாடுகள் உரிமைச் சாசனங்களின் அடிப்படையில் நிரந்தரமாகத் தீர்த்து வைத்தல், போர்க்குற்ற விசாரணைகளை 2015ம் ஆண்டு செம்டெம்பர் மாத ஐக்கிய நாடுகள் இணைந்த பிரேரணையின் அடிப்படையில் முறையாக நடத்து - வித்து நீதியைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியனவே.

இவற்றை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவது எமக்குத் தெரிந்ததே. ஆனால் எவ்வாறான அரசியல் மாற்றம் நடைபெறும் எவ்வாறான தீர்வு எமக்குக் கிடைக்கும், போர்க்குற்றங்களால் பாதிக்கப் - பட்டவர்கள் நீதியைப் பெறுவார்களா என்பதில் எமக்கு மயக்க நிலையே இருந்து வருகின்றது எனத் தெட்டத் தெளிவாக தமிழ் மக்களின் இன்றைய நிலையை வடமாகாண முதலமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

### ஊழல்கள், இலஞ்சம்....

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும், இனப் பழிவாங்கல்களையும், இலஞ்சம் மற்றும் களவு நடவடிக்கைகளைய் சிறுவருக்கு எதிராகவும் பெண்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற நெறிபிறழ்வு நடவடிக்கைகளையும் மக்கள் குறைகேள் பணிமனைக்குத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு தெரிவிப்பவர்களின் விபரங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்படுவதுடன் எந்நிலையிலும் தகவல் தருபவர்களின் விபரங்கள் வெளியிடப்படமாட்டாது என்பதனையும் மக்கள் குறைகேள் அலுவலகம் தெரியப்படுத்தியுள்ளது.

மலைமுரசின் அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் மின்னஞ்சல் தொலைபேசி ஊடாகவோ தகவல்களை வழங்கும்படி வேண்டப்படுகின்றது.

கணனி டிசைனர்
தேவை
0777 555 738

## அரசியல் அமைப்பிலேயே...

வேண்டுமானால் நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் சம்மதத்துடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானது என வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராசபக்சவும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

### பயங்கரவாத தடைச்சட்...

இராணுவம் சட்டபடியான ஶ்ரீலங்காவில் இராணுவமே தவிர விடுதலைப் புலிகளைப் போன்றதல்ல எனத் தெரிவித்த அவர் தேவைக்கேற்பவே இராணுவத்தின் எண்ணிக்கையும் முகாம்களும் தீர்மானிக்கப்படும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டமானது மற்றொரு சட்டத்தினால் பிரதியீடு செய்யப்படும் என்றும் போர்க்குற்ற விசாரணையானது நடத்தப்பட்டு குற்றமிழைத்தவர்கள் நிச்சமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் பிரதமமந்திரியினால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### அகிம்சைப் போராட்...

மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸிரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர், கிழக்கு மாகாண பட்டதாரிகளை அம்மாகாணத்தில் மீள்நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் இல்லையேல் அனைத்து பட்டதாரிகளையும் இணைத்து அகிம்சை வழியில் தான் முழுமையாக போராட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து, கூடிய விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் உடன்நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் வாக்குறுதியளித்துள்ளதை அடுத்து போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### தேசத்தைக்...

காணப்படும் என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே.- செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2 வீதமாக காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2 முதல் 4 வீதம் வரை அதிகரிக்கப்பட்டது.

மேலும் பெறுமதி சேர் வரி 11 வீதத்திலிருந்து 8 வீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

வரவு செலவுத்திட்டத்தினூடாக நிறைவேற்றப்பட்ட போதிலும் புதிய வரி திருத்தத்தை நடைமுறைபடுத்துவதற்கு பாராளுமன்றத்தின் சட்டத்தினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவையுள்ளதாக அரச நிதி கொள்கை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரித்திட்டம் தொடர்பிலான புதிய தீர்மானம எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரச நிதி கொள்கை திணைக்களம் எதிர்பார்த்துள்ளது.

## புதிய அரசியல் அமை...

முறைமையே ஏற்படுத்தப்படும். எனவே இந்த மாகாணசபை அதிகாரங்கள் எவ்வாறு இருக்க வேண்டும். அவ் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமா? அல்லாவிட்டால் தற்போதுள்ள அதிகாரங்களுடன் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். என்னென்ன உரிமைகளை எதிர்பார்க்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

இடதுசாரிகள் சமஷ்டி முறைமையை ஆதரிக்கின்றனர். ஆனால், ஏகாதிபத்திய வாதிகளின் தேவைக்காக சமஷ்டி முறைமை ஏற்படுத்தப்படுவதை இடதுசாரிகள் எதிர்க்கின்றனர். இதில் உடன்பாடு கிடையாது. புதிய அரசியலமைப்பு அனைத்து மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் அமைய வேண்டும். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை பிரிந்து செல்லும் மனோபாவத்திலிருந்து மீட்க முடியாது. ஆனால் தமிழர்கள் பிரிந்து வாழ்வதற்கான எந்த முயற்சியும் வெற்றிபெற மாட்டாது.

புதிய அரசியலமைப்பின் பின்னணியில் அமெரிக்காவின் கை ஓங்கியுள்ளது. இதனை இந்தியாவும் விரும்பாது. ஏனென்றால் இலங்கையை பயன்படுத்தி தெற்காசியாவில் தனது பலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு அமெரிக்கா முயற்சிக்கின்றது என்றார்.

### மாகாணக் கல்விப்....

கடந்த 14ம் திகதி கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் புதிய மாணவர்களின் அனுமதிக்குரிய கால்கோல் விழா நடைபெற ஏற்பாடாகியிருந்த தருணத்தில் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த அதிபர்கள் கூட்டமொன்றுக்காக உடனடியாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து அவர்கள் மூதூர் கல்வி வலயத்திற்கு வருகை தந்தவுடன் ஆசிரிய வளப் பங்கீடு தொடர்பான கலந்துரையாடல் மாலை 4 மணிவரை நடைபெற்றதாகவும் அடுத்த நாள் தமிழர்களின் பொங்கல் பண்டிகையாக இருந்த போதும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூட அனுமதிக்- காது கூட்டம் நடைபெற்றதாகவும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

சில அதிபர்கள் வேறு மாவட்டங்களில் உள்ள தமது வீடுகளுக்குப் பயணிக்க வேண்டியவர்களாக இருந்ததைக் கூட கிழக்கின் கல்விப் பணிப்பாளர் கவனிக்கவில்லை என்று மேலும் தொடர்கின்றது அக்கண்டனம்.

### அறிவித்தல்

## பெயர் மாற்றம்



இல.33/10, இசை நடனக் கல்லூரி வீதி, நொச்சி - முனை, மட்டக்களப்பு என்ற நிரந்தர விலாசத்தில் வசிக்கும் கருணாதிலக நிசாந்த ஆகிய நான் (அடையாள அட்டை இல 872754296 V) இன்று 16.01.2016 முதல் எனது பெயரை கருணாதிலக நிசாந்தன் என மாற்றம் செய்து அதன் படியே இன்றிலிருந்து அனைத்து ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

கருணாதிலக நிசாந்தன்

## சட்ட உதவி ஆணை...

உதவி ஆணைக்குழுவின் பணிமனையைச் சேர்ந்த சட்டத்தரணியொருவருக்குப் பணம் செலுத்துமாறு கோரப்பட்டதாக பெறப்பட்ட தகவலை அடுத்து இவ்விடயம் சம்பந்தமாக மேலதிகத் தகவல்களை பெற்றுக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகளின் போதே சட்ட உதவி ஆணைக்குழுவினைச் சார்ந்தவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

சட்ட உதவி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படுவதாகவும் அதற்காகப் பணியாற்றுகின்ற சட்டத்தரணிகளுக்கான கொடுப்பனவு- களை சட்ட உதவி ஆணைக்குழுவே மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்ததுடன், அவ்வாறு ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள் யாரேனும் சட்ட உதவி கோருபவர்- களிடம் கொடுப்பனவுகளை எதிர்பார்த்தால் அவை தொடர்பான தகவல்களைத் தருமாறும் சட்ட உதவி ஆணைக்குழுவினர் தெரிவித்து- ள்ளனர்.

### கண்ணிவெடி....

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர கூறினார்.

சர்வதேச கண்ணி வெடி அகற்றும் குழு மற்றும் இராணுவத்தின் விசேட குழுவொன்றும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

மேலும் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணி வெடிகளை அகற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

### முதலமைச்சரின்...

கவனித்துக்கொள்வார் என அவர் கூறுகின்றார். முதலமைச்சரினால் தவறாகவழிநடாத்தப்படும் கிழக்கு மாகாண சபையில் நாங்கள் ஸ்திரமானதோர் எதிர்க்கட்சியை அமைத்துமக்களுக்கு பயன் தரக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி கிழக்கு மாகாண சபையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிழக்கு மாகாணத்திற்காக மூவாயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது தன்னுடைய தொழில் முயற்சியின் ஒரு சிறிய முதலீடு என்றும் முதலமைச்சர் அண்மையில் கூறியுள்ளார். தன்னை பொருளாதா- ரத்தில் இவ்வளவு உயர்த்திப் பேசுகின்ற முதலமைச்சர் இப்- பிரதேசத்தில் வாழுகின்ற ஏழைக் குடும்பங்களுக்கு தனது சொந்த நிதியின் மூலம் ஒரு வீட்டை அல்லது ஒரு மலசல கூடத்தையேனும் கட்டிக் கொடுக்க முடியாமல் போயுள்ளது.

இன்று எமது பிரதேசத்தில் வெள்ளத்தினாலும், வறுமையினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏதாவது உதவிகளைச் செய்வதற்கு முதலமைச்சர் தனது அதிகாரத் தினூடாக எந்தவொரு முன்னேற்ற கரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமை கவலையான விடயமாகும்.

இது எமது மக்களுக்குச் செய்கின்ற பாரிய அநீதியாகும் எனவே தேர்தல் காலங்களில் மட்டும் மக்களுக்கு ஏதாவது கப்பங்களை வழங்கி வாக்குகளைச் சூறையாடுவதற்கு வருகின்றவர்கள் ஏன் ஏழை மக்கள் விடயத்தில் கவனம் செலுத்து- வதில்லை?

எனவே மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....






ஒருவகையில் அன்பால் போர் செய்து உலகை வென்ற அன்னை தெரேசாவும் ஒரு மிகச்சிறந்த தலைவரும் போராளியும் ஆவார். இதனை யாரும் மறக்கவும் முடியாது, மறுக்கவும் கூடாது.

தமிழர்கள் அல்லது தமிழ் இனம் அப்படி ஒரு தலைவரை உருவாக்கியதா? அல்லது உருவாக்கிய தலைவரை பயன்படுத்தத் தவறியதா? பதில் இன்றும் தொக்கி நிற்கிறது. உண்மையில் "பயன்படுத்தத் தவறியது" என்பது மட்டும் உண்மை. "தலை இருப்பவெனெல்லாம் தலைவனாக முடியாது". உருவாக்கிய தலைவனை, தலை இருப்பவனெல்லாம் தலைவனாக ஆசைப்பட்டு அழித்தொழித்தது என்பது மட்டும் முள்ளாக குத்தி நிற்கிறது.

சரி, வியட்நாம் நாடு எமது அறிவுக்குள் அறிமுகமாகியது என்னவோ இந்த வியட்நாம் விடுதலைப் போரினால் தான். அதனுடனே அறிமுகமாகியவரும் அந்த விடுதலைப் போரை தனது உயிராக தாங்கி நடந்த ஹோசிமின் அவர்களுமாவார். அதன் பிறகுதான் வியட்நாம் பற்றி சில விடயங்களை நாம் எமக்குள் தேக்கி வைத்தோம்.

வியட்நாம். தென்கிழக்காசியாவின் ஒரு நாடு. கிழக்கு, தெற்காக தென்சீனக்-கடலை எல்லையாகவும், வடக்கே சீனாவையும், மேற்கே லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளை எல்லையாகவும், 332,698 சதுர கிலோமீட்டர்களை பரப்பளவாக கொண்டதுடன், ஒரு கடல் குதிரை வடிவம் போன்ற அமைப்புக் கொண்ட, காடுகள், மலைகள், நிகரில்லாத வளமான மண்ணையும், குறைவில்லாத கடல் வளத்தையும் கொண்ட ஒரு அற்புதமான நாடு. அவர்களின் உடல்தோற்றம் சீன ஜப்பானிய கலவையாகவே தோன்றும்.

மேலும் வியட்நாம் 500,000 வருட Paleolithic காலத்தைச் சேர்ந்த Homo erectus என்கிற ஆதிமனித எச்சங்களை தாங்கிய ஒரு நாடு. இப்படி நம்ம நாட்டில் அப்படி ஏதாவது இருக்கா? என்று நீங்கள் கேட்டால், அவ்வளவு வருட பழைமை இல்லாவிட்டாலும், 2500 வருடங்களுக்கு முன்னர் எதோ அந்த சிங்கம் ஒரு குகைக்குள்ள வைத்து ஒரு இளவரசியோட ஏதோ செய்து கொஞ்சம் பிறந்து வந்த ஒரு கதை இருக்குது, அதுகளிட்ட மானங்கெட்டு தோற்ற ஒரு இனத்தின் கேவலமான வரலாற்றுடன் ஆதாரமும் இருக்குது. (புரியும் என்று நினைக்கிறன்)

வியட்நாம் இன்றைய நிலையில் மிகவும் தன்னிறைவான நாடு என்றாலும் பொய்யில்லை. 1945 இல் பிரான்சு நாட்டின் காலனித்துவத்தில் இருந்து நூறு வருட அடிமை வாழ்வுக்குப் பின்னர் சுதந்திரத்தை பிரகடனப்படுத்திக் கொண்டது. கம்யுனிசம் வேரூன்றியதால் வளர்ந்த ஒரு நாடு. அதேநேரம் கம்யுனிசம் காப்பாற்றி வ்ளர்த்த குழந்தை வியட்நாம் என்றாலும் பொருந்தும்.

இப்படியான ஒரு வியட்நாம் தேசத்தில் மிகவும் கொடூரமான ஒரு யுத்தம் நிகழக் காரணம் என்ன? உண்மையில் பிரான்சு அரசின் காலனித்துவத்துக்கு எதிராக நடந்த வியட்நாமியர்களின் போர், பின்னாளில் அது பனிப்போருக்குள் உள்வாங்கப்பட்டு, சர்வதேச அளவில் கவனிக்கத்தக்க போராக மாறியது. பின்னாளில் அமேரிக்கா பிரான்ஸ் க்கு உதவுவதாக சொல்லி உள்நுழைந்தது. ஆனால் அது அங்கே கம்யுனிசத்துக்கு எதிராக போர் தொடுக்கவே திட்டம் போட்டு இருந்தது.

இதற்கிடையில் உலகம் அதாவது ஐ.நா அந்த வியட்நாமை வடக்கு தெற்காக பிரித்து வைத்தது. தெற்கு வியட்நாமில், மேற்குலம் தமது ஆதரவு கைப்பொம்மை அரசொன்றை அங்கே நிறுவினாலும், முழு வியட்நாமும் சுதந்திர வியட்நாம் குடியரசுக்கு ஆதரவாகவே இருந்தார்கள்.

அந்த குடியரசின் ஆட்சியாளர்கள் கம்யுனிசம் மற்றும் இரசியாவின் ஆதரவுடன் வடக்கே நிலைகொண்டிருந்தார்கள். பிரிக்கப்பட்ட வடக்கு தெற்கு வியட்நாம் என்பதை அவர்கள் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்க வில்லை.

மனதளவில்கூட அப்படி பிரிக்க ஒட்டு மொத்த வியட்நாம் மக்களும் தயாரில்லை. ஆகவே வியட் காங் (Viet Cong) போராட்ட அமைப்புடன் சேர்ந்து தெற்கு வியட்நாம் நோக்கி சுதந்திர வியட்நாம் குடியரசின் படைகள் முன்னேறிச் சென்றன, தமது ஒட்டுமொத்த, பிரிக்கப்படாத தாயகத்தை மீட்டெடுக்க...

# நிகழ்வுகள்

## கௌரவிப்பு நிகழ்வு

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

முள்ளிப்பொத்தானை கோட்டக்கல்வி பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு துறைகளிலும் முதலாவதாக சாதனை படைத்த சாதனையாளர்களுக்கான விருந்து வழங்கு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரி மண்டபத்தில் கோட்டக்கல்வி அதிகாரி கே.எம்.சுபைர் தலைமையில் அதிபர்கள் சங்கத்தினால் நடைபெற்றது இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாரளுமன்ற உறுப்பினரும் திருமலை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான அப்துல்லா மகருப் அவர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் கௌரவ விருந்தினராக பிரதேச சபை செயலாளர் ஜெய விஷ்னு வலயக்கல்வி பணிப்பாளர் நசுவர்காண் கலந்து கொண்டார். வைத்தியர், சட்டத்தரணி, பிரதேச செயலாளர் பொறியியளாலர், விளையாட்டு அதிகாரி இன்னும் பல துறைகளிலும் சாதனை படைத்தவர்களுக்கு நினைவு சின்னங்கள் பதக்கங்களும் பிரதம அதிதியினால் அணிவிக்கப்பட்டது.





## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

திருகோணமலை. முதூர் பகுதிஎல் உள்ள சூடைகுடா பாரதி வித்யாலயத்தை சேர்ந்த 25 பள்ளி மாணவர்களுக்கு, திருகோணமலை இன்னர் வீல் கிளப்பால் விளையாட்டு பொம்மைகள் மற்றும் காலணிகள் அன்பளிப்பாக 12.01.2016 அன்று வழங்கப்பட்டது.

இந்த நன்கொடைக்கு இங்கிலாந்தை சேர்ந்த திருமதி மங்களேஸ்வரி ஜெயகுமார், மற்றும் திருமதி விபு சக்திபவன் அனுசரணை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இன்னர் வீல் கழகத்தின் தலைவி திருமதி. கௌரீ ஞானகுனாளன் அவர்கள் கலந்து கொண்டார்.. அவருடன் மற்ற அங்கத்தவர்களும் இனைந்து கொண்டார்கள்.








## கட்டுரைப் போட்டியில் முதலிடம்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் அதன் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ர ீ தியில் ஊடகவியலாளர்கள் மத்தியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் மூதூர் முறாசில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். ஆக்க இலக்கியப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் 25ற்கும் அதிகமான வெற்றிச் சான்றிதழ்களையும் பல விருதுகளையும் வென்றுள்ள முறாசில் 'முஸ்லிம்களும் சமகாலப் பிரச்சினைகளும்: சில பதிவுகள்', 'எரிகிடங்கைப் பயந்து கொள்!' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

## கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பசுமைத்திட்டம்

ஆலயநிர்வாகத்தினரின் அழைப்புக்கிணங்க, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. ஜெ. ஜனார்த்தனன் தலைமையிலான சுமார் 25 பேர் கொண்ட குழுவினர் கடந்த பௌர்ணமி தினமாகிய 24.12.2015 அன்று தம்பலகாமம் எல்லையில் அமைந்திருக்கும் பழம்பெரும் கப்பல்துறை கண்ணகி அம்மன் ஆலயவளாகத்தில் இரண்டாம் கட்ட பசுமைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினர்.

300 வருடகால தொன்மையான கப்பல்துறை கண்ணகிஅம்மன் ஆலயத்தை அழியவிடாமல் பேணிக்காத்துவருகின்றனர் தம்பலகாமம் மக்கள். கப்பல்துறை கண்ணகிஅம்மன் ஆலயத்தின் "பசுமைத் திட்டம் - கட்டம் 1" கடந்த பௌர்ணமி தினமாகிய 25.11.2015 அன்று ஆலயநிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி – திருகோணமலையில்

கேமரா கண்கள் கதிரவன்

திருகோணமலை மாவட்ட பூப்பந்து சங்கம் மாணவர்கள் மற்றும் வளர்தோர்கள் மத்தியில் சுற்றுப் போட்டி ஒன்றினை கடந்த 09.01.2016, 10.01.2016 ஆம் திகதிகளில் பிரடறிக் கோட்டை 2வது கஜபா படையணி உடற்பயிற்சி கூடத்தில் நடத்தியது. இதில் 116 பேர் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

15 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தனிப்போட்டி, இரட்டையர் போட்டி 19 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தனிப்போட்டி, இரட்டையர் போட்டி, 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தனிப்போட்டி, இரட்டையர் போட்டி, திறந்த ஆண்களுக்கான போட்டி ஒற்றையர் போட்டி, இரட்டையர் போட்டி, பெண்களுக்கான திறந்த ஒற்றையர் போட்டி, இரட்டையர் போட்டி என 10 கட்டங்களாக இச்சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியின் இறுதி நிகழ்வில் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் எம்.மதிவாணன் பிரதம விருந்தினராகவும், 221வது படையணி கட்டளையிடம் அதிகாரி கேணல் உடத்த பண்டார கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். இவர்களுடன் கஜபா படையணி கட்டளையிடம் அதிகாரி மேஜர் மகேஷ் மொரஹம்மான, தேசிய அபிவிருத்தி வங்கியின் திருகோணமலை கிளை முகாமையாளர் ந.வசீகரன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி வைத்தனர்.

வெற்றி பெற்றோர் விபரம் கீழ்வருமாறு,

15 வயது ஆண்கள் ஒற்றையர் சம்பியன் எச்.சமீன் சஸ்மித, 2ம் இடம் க.சதர்சிகன்.

15 வயது ஆண்கள் இரட்டையர் சம்பியன் ஹெந்த விதானஹே- சமிந்த, 2ம் இடம் எஸ்.ரிஷிகேசன் - ச.கோகுலவர்த்தன்

19 வயது ஆண்கள் ஒற்றையர் சம்பியன் ச.சுபராஜ், 2ம் எச்.ஹர்சிக

19 வயது ஆண்கள் இரட்டையர் சம்பியன் ஸ்பென்சர் ஆர்னோல்ட்- ஹன்சிக, 2ம் இடம் ரசன்ஜய-சித்தும்

பெண்கள் திறந்த போட்டி ஒற்றையர் பாறுக் நதிகா, 2ம் இடம் மகேஷிகா

பெண்கள் இரட்டையர் போட்டி கலாநிதி-பாறுக் நதிகா, 2ம் இடம் பிரவீனா- துசாலினி.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒற்றையர் போட்டி சம்பயின் போல் டிஸ்னி, 2ம் இடம் ஆர்.குமாரராஜா

40 வயதுக்கு மேற்பட்டோர் இரட்டையர் போட்டி ஆர்.குமாரராஜா-இரா.ஸ்ரீஞானேஸ்வரன், 2ம் இடம் சிந்தக-சரத்

திறந்த போட்டி ஆண்கள் ஒற்றையர் போட்டி சம்பியன் த.நிலோஜன் 2ம் இடம் போல் டிஸ்னி

திறந்த போட்டி ஆண்கள் இரட்டையர் போட்டி சம்பியன் த.நிலேஜன்- ச.டெலிசியன், 2ம் இடம் சி.புஸ்பதரன்- சரத்







## உலக சாதனை படைத்த ஜோடி

டென்னிஸ்

டென்னிஸ் போட்டிகளில் தொடர்ச்சியாக 29 போட்டிகளில் வெற்றி பெற்று சானியா மிர்சா-மார்டினா ஹிங்கிஸ் ஜோடி உலக சாதனை படைத்துள்ளது. சிட்னியில் நடைபெறும் சிட்னி ஓபன் டென்னிஸ் போட்டித் தொடரின் முதல் சுற்றில் அவுஸ்திரேலியாவின் அனஸ்தாசியா ரோடினோவா- அரினா ரோடினோவா ஜோடியையும், காலிறுதியில் சென் லியாங்- ஷுவாய் பெங் ஜோடியையும் வென்றது. இதன் மூலம் அதிக போட்டிகளில் தொடர் வெற்றி பெற்ற புவர்டோ ரிகான் ஜிகி பெர்னாண்டஸ்- பெலாரஸ் நடாஷா சாதனையை சமன்செய்தனர். இந்நிலையில் நடைபெற்ற இறுதிச்சுற்று போட்டியிலும் சானியா ஜோடி வெற்றி பெற்று கிண்ணத்தை வென்று அசத்தியதோடு தொடர்ச்சியாக 29 போட்டிகளில் வென்று புதிய சாதனையை படைத்துள்ளது.

## இந்திய வீரரின் புதிய சாதனை



அவுஸ்திரேலியா- இந்தியா அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்தது. இந்த போட்டியில் ரோஹித் சர்மா 171 ஓட்டங்கள் எடுத்தார், அவுஸ்திரேலிய மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் (ஆட்டமிழக்காமல்) என்ற சாதனையை படைத்தார்.

மேலும் சச்சின், பிரையன் லாராவை பின்னுக்கு தள்ளி 19 இன்னிங்ஸ்களிலேயே அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் 1000 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையும் படைத்துள்ளார்.

## அப்ரிழயை காப்பாற்றிய ரசிகர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டி20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் டி20 அணியின் தலைவர் அப்ரிடி சக வீரர் அகமது ஷேசாத் உடன் சேர்ந்து ஆக்லாந்து விமான நிலைய மெக்டொனால்டு சாப்பிடுவதற்காக சென்ற போது அவர்களிடம் நியூசிலாந்து கரன்சி இல்லை. இருவரும் அமெரிக்க டொலர்களே வைத்திருந்தனர். ஆனால், மெக்டொனால்டு நிறுவனமோ அமெரிக்க டொலரை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனை பார்த்துக் கொண்டிருந்த கிரிக்கெட் ரசிகர் வாகாஸ் நவீத் என்பவர் அவர்களுக்கு பதிலாக பணத்தை கட்டினார். இதனை ஒருவர் வீடியோவாக எடுத்து வெளியிட்டுள்ளார். இது சற்று வருத்தம் அளிப்பதாக அப்ரிடி தெரிவித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும்.....! போரக்குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்.......! காணிகளை விடுவிக்க அறிக்கை வேண்டும்.....**

வடக்குகிழக்கில்

# "இராணுவ இருப்பு சட்டப்படியானது"

## ஸ்ரீலங்காவின் பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க



வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் நிலைகொண்டுள்ளமை சட்டப்படியானது எனது ஸ்ரீலங்காவின் பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க தேசிய தைப்பொங் - கல் விழாவில் தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் தமிழ் மக்களின் உண்மையான நிலைமையை உலகிற்கு எடுத்தியம்பிய பின்னர் பேசிய பிரதமர் பல உறுதிமொழிகளை அவ்விடத்தில் வழங்கி வைத்தார்.

இராணுவம் நிலைகொண்டுள்ள காணிகள் தொடர்பான விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை அரசாங்கம் கோரியுள்ளது. அவ்வறிக்கை கிடைத்த பின்னர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

வடக்குகிழக்கில் நிலைகொண்டுள்ள

17

## வடக்குகிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பம்




வடக்குகிழக்கு மாகாணங்களில் 64 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன என இராணுவம் தெரிவித்துள்ளது.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கின் முல்லைத்தீவு, முகமாலை பிரதேசங்களின் பெரும் பகுதிகளிலும் கிழக்கின் திருகோணமலையில் சிறிய பகுதியொன்றில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக

17

## திருகோணமலைக்குத் திரும்பும் இந்திய ஏதிலிகள்

**எதிர்வரும் 19ம் திகதி வருகை**

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை ஏதிலிகள் சிலர் எதிர்வரும் 19ம் திகதி இலங்கை வரவுள்ள நிலையில் அவர்களுள் திருகோணமலையைச் சார்ந்தவர்களும் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அனுசரணையுடன் நாட்டுக்குத் திரும்பவுள்ள 41 தமிழ் ஏதிலிகள் சென்னை மற்றும் மதுரை விமான நிலையங்களின் ஊடாக மிஹின் லங்காவிமானத்தில் பயணிப்பர் எனத் தெரிகின்றது.

இவர்களுக்கான பொதி நிறையை சாதாரண பொதி நிறையான 40 கிலோவில் இருந்து 60 கிலோ வரைக்கும் கொண்டு வர அனுமதிக்கப்பட்டுள்ளதாக விமான சேவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திரும்பவுள்ள ஏதிலிகளுக்கு ஐநா அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் இலவச விமானப் பயணச் சீட்டுக்களை வழங்கவுள்ளதுடன் தலா ஒவ்வொருவருக்கும் அ.மெ. டொலர்களில் மீள் இணைவுப்படி 75, போக்குவரத்துப்படி 19, குடும்பத்திற்கான ஏனையபடி 75ம் வழங்கியுள்ளது.



வைப்பகப் படங்கள்

## நாட்டைக் கட்டியெழுப்பும் வரியில் மாற்றம் இல்லை

புதிய வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் முன்மொழியப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி இரண்டு சதவீத அதிகரிப்பானது உடனடியாக பிரயோகத்திற்கு வராது எனவும் பழைய வரி வீதத்திலேயே நடைமுறைப்படுத்தப் படும் எனவும் அரச நிதிக் கொள்கை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் வட் எனப்படும் பெறுமதி சேர் வரி 11 வீதமாக

17

## அகிம்சைப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக கிழக்கு மா.ச உறுப்பினர் லாஹிர் அச்சுறுத்தல்

கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அனைத்து கிழக்கில் உள்ள பட்டதாரிகளையும் இணைத்துக் கொண்டு அகிம்சைப் போராட்டத்தில் இறங்கவுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சிரேட்ட சட்டத்தரணியுமான ஜே.எம்.லாஹிர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை(12) பட்டதாரிகளுக்கு கொழும்பு அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நியமனமானது கொழும்பை மையப்படுத்தியே வழங்கப் - பட்டுள்ளது எனத் தெரிவித்த லாஹிர் கிழக்கு மாகாணத்தில் வெற்றிடங்கள் இருக்கின்ற நிலையில் ஒருவர் கூட கிழக்கில் நியமனம் செய்யப் - படவில்லை என்றும் ஆதங்கம் வெளியிட்டார்.

இதனை ஆட்சேபித்து கிழக்கு

17


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்

SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.





## முதலமைச்சரின் மாயவலையில் கிழக்கின் த.தே.கூ உறுப்பினர்கள் சிக்கிவிட்டனர்



கிழக்கு மாகாண சபையின் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலர் முதலமைச்சரின் மாய வலையில் சிக்கிக்கொண்டு தமிழ் மக்களுக்காக எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் செய்ய முடியாமல் தடுமாறுவது கவலையளிப்பதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ் சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் கிழக்கு மாகாணத்தில் கல்வி தொடர்பான பிரச்சனை ஒன்றை கல்வி அமைச்சரிடத்தில் பேசுகின்ற போது [illegible]

**மாகாண சபை உறுப்பினர் சுபைர் குற்றச்சாட்டு**

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்த பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 16.01.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.